விலை சதம் 50

# ஈழநாடு வார மலர்

THE EELANADU VARAMALAR

பக்கங்கள்—10

19 வைகாசி 16 ஜ: ஆகிர் 10 ஞாயிற்றுக்கிழமை [29—5—77] இதழ் 107

சுவையான ஐஸ்கிறீம் வகை களுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவீட்ஸ், றீக்கோ பீடா வகைகளுக்கும்

றிக்கோஹோட்டல்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 464

"நீம் வாசனை சோப்"

சுத்தமான வேப்பெண்ணெய் கலந்து தயாரிக்கப்பட்ட

நீம் வாசனை சேப்பை

வாங்கி உபயோகியுங்கள். உங்கள் சரும பாதுகாப்பிற்கு சிறந்தது.

—ஓர் மில்க்வைற் தயாரிப்பு

## கூட்டணி தேர்தல் விஞ்ஞாபனம்

★ தமிழ் ஆட்சி மொழி ★ மத சுதந்திரம் ★ சாதி ஒழிப்பு ★ முஸ்லிம்களுக்கு உரிமை

# சுதந்திர இறைமையுள்ள தமிழ்ஈழ அரசு நிறுவ அங்கீகாரம்

## தமிழ் மக்களிடம் த. வி. கூட்டணி கோருகிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுதந்திர இறைமையுள்ள மதச்சார்பற்ற சமதர்ம 'தமிழ்ஈழ' அரசை அமைப்பதற்கு அங்கிகாரம் பெறும்வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்துள்ளது. அதிகாரம் பரவலாக்கப்பட்டு ஒருசாரார் ஏனையோர் மீது அதிகாரம் செலுத்தாத வகையில் சுயாட்சி முறையில் ஆட்சி அமையவேண்டும் என்றும் தேர்தல் விஞ்ஞாபனம் கூறுகிறது.

நடவடிக்கைக் குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட இத்தேர்தல் விஞ்ஞாபனம் நேற்றிரவு யாழ். மூற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் திரு அமிர்தலிங்கத்தால் அறிவிக்கப்பட்டபோது கரகோஷம் வானைப்பிளந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகத்தில் திரு. ஞேஸ் டி லாஸ் தலைமையில் நடைபெற்ற நியமனக்குழுக்கூட்டத்தில் அங்கிகரிக்கப்பட்டபின்னரே வெளியிடப்பட்டது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

சுதந்திர இறைமையுள்ள மதசார்பற்ற சமதர்ம அரசை நிறுவல் ● அதிகாரம் பரவலாக்கப்பட்டு, ஒருசாரார் ஏனையோர் மீது அதிகாரம் செலுத்தாதவகையில் சுயாட்சிமுறையில் வழிவகுத்தல் ● தமிழ் தேசிய இனத்தின் முக்கிய அங்கமான மூஸ்லிம் மக்கள் சுயநிர்ணய உரிமையில் பிரிந்துசெல்வதற்கும் மாகாணமாக ஒருங்கிணைந்து வாழ்வதற்கும் அதிகாரமளித்தல் ● சகல மதத்துக்கும் காப்பு அளித்து உதவி வழங்கல் ● சாதி முறையை முற்ருக அளித்தல் ● தமிழ் மொழி ஆட்சி மொழி ● எமது தேசிய இனத்துடன் வாழ விரும்பும் சிங்கள இனத்துக்கு கல்வி, மொழி வாய்ப்பளித்தல் ● தமிழர் வாழும் வேறு இடங்களில் அவர்களது உரிமைகளுக்கு உத்தரவாதம் நாடப்படும். எமது கொள்கைகளை அங்கீகரிக்கும் முற்போக்கு சிங்களக் கட்சிகளுடனும் சுதந்திரத்திற்கு ஆதரவான நாடுகளோடும் உறவை வளர்ப்பது

இத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

நாம் கடந்த காலங்களில் எமது உரிமைகளைப் பெறமுடியாது. இலங்கை குடியரசைப் பகிஷ்கரித்துவெளியேறினேம்.

நடைபெற உள்ள தேர்தல், தமிழ் தேசிய இனம், மீண்டும் அடிமையாக வாழ்வதா அல்லது விடுதலை பெறுவதா? என்பதை நிர்ணயிக்கும்.

1948ம் ஆண்டு எமது குடியுரிமைச்சட்டம் பறிக்கப்பட்டு பறிபோயின, படிப்படியாக பரவலான குடியேற்றம், மொழி, மதம், பண்பாடு, கல்வி, தொழில்வேலைவாய்ப்பு, தமிழ்ஈழ பொருளாதாரம் புறக்கணிப்புஆகியன நாளுக்கு நாள் அதிகரிக்கப்பட்டு சிங்கள தேசிய இனத்தால், ஒதுக்கப்பட்டுள்ளோம்.

எனவேதான் எமது இனம் சுயநிர்ணயமுள்ள தமிழ் ஈழ

(10-ம் பக்கம் பார்க்க)

### சேருவல கூட்டணி வேட்பாளர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சேருவில் தொகுதியின் தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகராக ஜனப் எம். ஐ. ரகுமான் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகத்தில் நேற்று கூட்டணி நியமனக் குழு கூடி இவரின் பெயரைத் தெரிவுசெய்தது. (கெ-இ)

### இன்று வருகிறார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மன்னார் தொகுதி தமிழர் கூட்டணி வேட்பாளர் திரு. சூசைதாசன் உன்று ஸம்பியாவிலிருந்து யாழ்ப்பாணம் வருகிறார். இவர் தமது நியமனப் பத்திரத்தை 31-ம் திகதி கட்சியிடம் சமர்ப்பிப்பார், (கெ-இ)

### அபேட்சகர் நியமனம்

## இன்றும் நாளையும் இறுதி முடிவுசெய்வர்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழ் சுயாட்சிக் கழக அபேட்சகர் நியமனக்குழு இன்று கூடி, பருத்தித்துறை, நல்லூர், சாவகச்சேரி தொகுதிகளுக்கான அபேட்சகர் பற்றி ஆராயவிருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சி, யாழ். மாவட்ட கமிட்டி இன்று கூடி, யாழ்ப்பாணம், காங்கேசன் துறை, கோப்பாய் தொகுதிகளுக்கான அபேட்சகர் பற்றி ஆராயவிருக்கிறது.

சாவகச்சேரியில் நாளை தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியினர் கூடு, வடக்கில் 7 தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்துவது பற்றி ஆராய்கின்றனர்.

திரு. சி. சுந்தரலிங்கம் தலைமையிலான ஈழத் தமிழ் இன சுதந்திர முன்னணியும் நாளை கூடி அபேட்சகர்கள் பற்றி இறுதி முடிவுசெய்யவிருக்கிறது. (க)

### "தமிழர் தேசிய இனப் பிரச்னையில்

# தெளிவான கொள்கை, திட்டமின்றி போட்டியிடுவதில் அர்த்தமில்லை"

## கம். கட்சி மேலிடத்துக்கு வி. பி. கடிதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழர் தேசிய இனப் பிரச்னை பற்றி ஒரு தெளிவான கொள்கைத்திட்டமின்றி தேர்தலில் வட பகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி போட்டியில் இறங்குவது அர்த்தமற்றசெயல் என்று தெரிவித்து கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேச அமைப்பாளர் திரு. வி. பொன்னம்பலம் கட்சி மேலிடத்திற்கு கடிதம் எழுதியுள்ளார்.

18-5-77ல் யாழ்ப்பாணம் பிரதேசக்கிளை சார்பில், கொழும்பு மத்திய கமிட்டிக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்கு, 20-5-77 திகதியிடப்பட்டு பொதுக் காரியதரிசி திரு. கே.பி. சில்வாவினால் அனுப்பப்பட்ட கடிதத்தில், வடக்கில் இடம் பெறத் தகுந்த போட்டி ஓர் அடையாளப் போட்டியாகவே அமையும் என்றும் வடக்குப் பகுதியில் ஏதாவதொரு கட்சி உறுப்பினர் போட்டியிடுவதாயின், அவர் புதிய ஐக்கிய முன்னணியின் வேலைத்திட்டத்துக் கமையவே போட்டியிடமுடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுபான்மையினர் பிரச்னை பற்றி அதிகாரத்தைப் பரவலாக்குதல், ஜனநாயகப் படுத்துதல் என்ற அம்சங்களின் அடிப்படையில் பிரதேச சுயாட்சிக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்தும் வகை

(2-ம் பக்கம் பார்க்க)

### மாகோ வரை ரயில்சேவை

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொழும்பில் ரயில்வே ஊழியர்களின் 'சட்டப்படிவேலை' இயக்கத்தின் காரணமாக ரயில் சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்

(10-ம் பக்கம் பார்க்க)

## விலை குறைப்பு

### ஸ்ரூடியோ நித்திய சித்ரா,

(படப்பிடிப்பாளர்களும், படம் பிறேம் செய்பவர்களும்)

பிரதான வீதி --- சங்கானை.

| அளவு | பிரதி எண்ணிக்கை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|---|
| பாஸ்போட் 2¼'' X 3½'' | 02 | ரூபா-7-00 | ரூபா 6-25 |
| போஸ்காட் 3½'' X 5½'' | 02 | ரூபா 14-00 | ரூபா 12-75 |
| கபினெட்குருப் 4¾'' X 6½'' | 02 | ரூபா 35-00 | ரூபா 30-00 |
| 10'' X 12'' குருப் | 02 | ரூபா 100-00 | ரூபா 90-00 |

(6271)



## The Fine Arts Society, Jaffna
## நுண்கலை மன்றம், யாழ்ப்பாணம்

## நடன, நாடக விழா
## (FESTIVAL of DANCE & DRAMA)

4-6-77 சனிக்கிழமை
மாலை 6-30 மணி

நடனம்: திருமதி சாந்தினி சிவநேசன்
அவர்களின் 'கலாபவனம்', கொக்குவில்

இரவு 8-00 மணி:

நடனம்: திருமதி ஜெயலெட்சுமி கந்தையா
அவர்களின் 'நடனாலயா', கொழும்பு-6

5-6-77 ஞாயிற்றுக்கிழமை
மாலை 6-30 மணி

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச்
சங்க ஊழியர் கலாமன்றம்
அளிக்கும்

நாடகம்: 'மனிதனும் மிருகமும்'
இரவு 8-15 மணி (நவீன நாடகம்)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆசிரியர்
அளிக்கும்

நாடகம்: 'மேலும் கீழும்'
(பாணி நாடகம்)

ரிக்கற் விபரம் (2 நாட்களுக்கும்)
2 ஆசனங்கள் ரூ. 30/- (ரிசேர்வ்ட்)
ரூ. 25/-
1 ஆசனம் ரூ. 20/- (ரிசேர்வ்ட்)
ரூ. 15/- ரூ. 10/-

வீரசிங்கம் மண்டபம்
யாழ்ப்பாணம்.

ரிக்கற் ரிசேர்வ் செய்யுமிடம்:
றேயல் டிஸ்பென்ஸறி,
யாழ்ப்பாணம். 6306



அதிக போசாக்குச் சக்தி நிறைந்தது

## 'சோயாற்றின்'

கோப்பி போன்று பாவிக்கக்கூடியது




இலங்கையில் எல்லாக் கடைகளிலும்
பெற்றுக்கொள்ளலாம்

23-5-77-ல் நடந்த எமது கடைத் திறப்பு விழா
விற்குச் சமுகம் தந்த அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

## அண்ணா கோப்பிக்கடை

இல. 1, நவீன சந்தை சுன்னாகம்.



PERCIVAL HALL
Chapel Street, Jaffna.
Nov. 77 Examinations.

1. Foundation Stage Section B & Professional Stage I
   Applications Close 3-6-77
   Enrolment 6-6-77
2. Classes for Foundation Section A & Chartered Preliminary. — Started

6300



## விளம்பரம்

அளவெட்டி - மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்தில் சுமார் 5000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனையாக விருக்கின்றன. இதற்கான கேள்வி விண்ணப்பங்கள் யாவும் சங்கத்திலிருந்து பெறப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் பூர்த்தி செய்யப்பட்டு, முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 2-6-77 ந் திகதி வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்கு முன்னதாகச் சங்கக் காரியாலயத்தில் சேர்ப்பிக்கப்படவேண்டும். விண்ணப்பப் பத்திரத்திற்கான வைப்புப் பணம் ரூபா 500/-ஆகும்.

க. கணபதிப்பிள்ளை,
பொதுமுகாமையாளர்,
அள- மல்- ப. நோ. கூ. சங்கம்.
6263


## தமிழர்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யில் முழுநாட்டிலும், மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே இவ்வேலைத் திட்டத்தின் அம்சமாகும்.

அரசியல் குழுவின் அபிப்பிராயப்படி, பிரதேசக்கிளை சார்பில் முன்பு கொழும்புக்கனுப்பி வைக்கப்பட்ட, தமிழரை ஒரு தேசியஇனமாக அங்கீகரித்தல், சுயநிர்ணய உரிமையோடு கூடிய பிரதேச சுயாட்சி என்ற அம்சங்கள் பற்றி பொதுத் தேர்தலின் பின்பே கட்சி முடிவுசெய்யும் என்று எழுதப்பட்டுள்ளது.

இந் நிலையில் வடக்கில் கம்யூனிஸ்ட்கட்சி போட்டியிடுவது பற்றி திரு வி. பொன்னம்பலம், கட்சியின் பொதுச்செயலாளருக்கு 27-5-77 திகதியிட்டு, எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

''அன்புள்ள தோழரே, தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையில் நட்புறவு உருவாகி வருகின்ற இத்தருணத்தில் அவர்களுக்கு எதிராக போட்டியிடுவது அவர்களுடன் அரசியல் முரண்பாடொன்றை வளர்க்க நேரிடும். அடையாளப் போட்டி என்று நீங்கள் கடிதத்தில் கூறியுள்ளதைப் போன்று யோசிப்பதாகிலும்கூட தமிழர் தேசிய இனப்பிரச்னை பற்றி, ஒரு தெளிவான கொள்கைத் திட்டமின்றி போட்டியில் இறங்குவதென்பது அர்த்தமற்றது.

(10-ம் பக்கம் பார்க்க)


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

17 1/2 அடி நீளம் கொண்ட பிளாஸ்டிக்வள்ளம் அத்துடன் 6 HORSE EVINBROD மோட்டர் 32 வலைசகிதம் உடனடியாக விற்பனைக்கு உண்டு. K. T. கார்த்திகேயன் கடற்கரை வீதி, பருத்தித்துறை. 6308

இங்கிலிஸ் மடல் வில்லியஸ் என்ஜின், சென்றிப்பம், சக்சன், 25 அடி டிலிவரி சகிதம் நீர் இறைக்கும் இயந்திரம் உடனடியாக விற்பனைக்கு உண்டு. என்சின் புதியது. தொடர்பு கொள்ளவும். மு. அம்பலவாணர், பாடசாலை றேட், கைதடி நுணாவில், சாவகச்சேரி. 6309

அதிகம் பாவிக்காத புது மெயின்/ பற்றறி கசற் ரேப் றெக்கோடர். 15/4 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 6296

மானிப்பாய் பரிஷ் கட்டுடையில் செண்பகவுடையான் ஆட்சி என்ற 32 3/4 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு. நவாலி றேட்டிற்கும் கட்டுடை அரசடி வீதிக்கும் அண்மையிலுள்ளது. விபரங்களுக்கு: வைரவநாதன் ஜெகதீஸ்வரன், மாணிக்க வில்லா, கட்டுடை மானிப்பாய் உடன் தொடர்பு கொள்ளவும். 6303

15 H.P. மோட்டர், ஸ்ராட்டர், கிரைண்டர் உடனடியாக விற்பனைக்குண்டு. 54, ஜெயா வைண்டிங் வேக்ஸ் மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். 6305

ரேடியோ, சுவர்மணிக்கூடுகள், மணிக்கூடு, சைக்கிள், மின்சாரப்பொருட்கள், வேலும் மயில். நல்லையா, ''பிளவர் கொடேஜ்'' உடுவில், சுன்னாகம். 6260

30-5-77ல் வதிருப்பழை கண்ணகை அம்மன் பொங்கல் திருவிழாவில் 'மில்க்வைற்' விளம்பர வாகனத்தில் சோப் வாங்கும் அன்பர்களுக்கு பல சிறந்த இனாம் பொருட்கள் இலவசமாக கொடுக்கப்படும். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 6264

பெடிகிறீட் பொமனேறியன் ஜோடி நாய்க்குட்டிகள். 22, கண்டி வீதி, யாழ்ப்பாணம். போன்: 394. 6299

பாலையூர் சந்தைக்கு அண்மையில் கடற்கரையோரமாக 4 பரப்பு, 5 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு. ஸ்ரீபதிநாதன், ''அன்ரோகளஞ்சியம்'' 72, பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம். 6311

### தேவை

முருகண்டிக்கும், மாங்குளத்துக்கும் இடையில் 50 அல்லது 100 ஏக்கர் மேட்டுக்காணி கிணற்று வசதியுடன் குத்தகைக்கு அல்லது கொள்முதலுக்கு தேவை. விபரங்களை தபால் மூலம் அறிவிக்கவும். விளம்பர இல. 6298, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 6298

சைக்கிள் உதிரிப்பாகங்கள் ( Spare Parts ) விற்பனை செய்வதில் ஐந்து வருட அனுபவம் உள்ள விற்பனையாளர் பிரபல ஸ்தாபனம் ஒன்றிற்கு தேவை. S.S.C. சித்தியெய்தியவராகவும் நல்லொழுக்கமும், நற்பண்பும் உள்ளவராய் இருத்தல் விரும்பத்தக்கது. அடிப்படைச் சம்பளம் ரூபா 250/-X350 வரை நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 6310, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 6310

### விற்பனைக்கு

திறம் திண்டுக்கல் 6 அடி 8 அங். உயரமான இரும்புப் பெட்டி (Iron safe) உடன் விற்பனைக்கு உண்டு. 2 இலாச்சிகளையும் 2 கதவுகளையும் உள்ளடக்கியது வெளியே 2 கைப் பூட்டுகளுண்டு. நல்ல நிலை, அழகிய தோற்றம். மயிலிட்டி வடக்கிலுள்ள ''யோகவாசம்'' எனும் திரு. செ. சின்னத்தம்பி அவர்களின் இல்லத்தில் பார்வையிடலாம். 6278


### காணவில்லை

26-5-77 வியாழன் மாலை 7.30 மணியளவில், என்னுடைய சில பொருட்களைக் கைபிழைபாடாக கொடிகாமம் புகையிரத ஸ்தானத்தில் எடுத்த அன்பர், அவைகளுள் இருந்துள்ள இரண்டு பெரிய புத்தகங்களையும், முக்கியமாக பையையும், மருதனார் மடத்திலுள்ள கிறிஸ்தசேவா ஆச்சிரமத்தில் கொடுத்தால் நன்றியுடையவனாவேன். இது பற்றி ஒரு கேள்விகளும் கேட்கப்படமாட்டாது. ச. குலேந்திரன். 6312

### CLASSES

ICMA, ACCA, Chartered Accountants of Sri Lanka November 1977 Examinations classes just commenced. Saturdays 2 to 5 p. m. Sundays 8 to 12 noon. Jaffna Education Centre 22, Ramiah Chettiar Lane, Hospital Road., Jaffna. 6297


யாழ். நுண்கலை மன்றம் எதிர் வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் தனது வருடாந்த நடன நாடக விழாவை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்தவுள்ளது. எதிர்வரும் ஞாயிறன்று மேடையேறும் ''மனிதனும் மிருகமும்'' என்ற நாடகத்தில் ஒரு கட்டம் இது.



# மாமி நல்லவ!

சித்தங்கேணி 'குண'

சின்னக்கா அடிவயிற்றைப் பிசைந்தபடி முக்கிக் கொண்டிருந்தா

'என்ன சின்னக்கா?'

'வயிற்றுக்குள்ளே குத்துகிறது, மாமியை எழுப்பிவிடு?'

மாமி வந்தா! வயிற்றைப் பிசையும் மருமகளைப் பார்த்துக் கையைப் பிசைந்தபடி சுவரைப் பார்த்தா. பன்னிரண்டரை மணி! நடுச்சாமம்!

'செல்வம் அக்காவைக் கூப்பிடவே?'' செல்லம் அக்கா நேர்ஸ் அல்ல, அவ 'நாலும்' தெரிந்த பெரிய மனுஷி!

செல்வம் அக்கா வந்தா! எல்லோரும் அவவையே பார்த்தோம். அவவிற்கு நேரம்காலம் குத்துவலி எல்லாம் எப்போ எப்படி என்பதெல்லாம் அத்துபடி!

'டேய் மேனே, காரைக் கொண்டு வா!'-எல்லாம்ஆயத்தமாக வைத்திருந்தாலும் எங்களுக்குள் ஏதோ ஒரு பரபரப்பு!

''சீனி, கோப்பி, பழந்துணி, சுடுதண்ணிப்போத்தில் எல்லாம் எடுத்து வையுங்கோ-அங்கே போய் அவதிப்படாமல்!'' – செல்லம் அக்கா சொன்னு!

சின்னக்கா அடிவயிற்றைப் பிசைந்தவாறே இருந்தா! மாமி செல்லம் அக்காவைப் பார்க்கிறு அந்தப் பார்வையின் அர்த்தம் அவவிற்கு விளங்கிவிட்டது. இன்னும் இரண்டு மூன்று மணித்தியாலங்களில் பூவுலகில் வந்து தவழும் குழந்தை ஆணு, பெண்ணு? என்று அறியும் ஆவல் - அவசரம்!

'எங்கே பிள்ளை குத்துது?'

''எங்கே குத்துகிறது? அடிவயிறும் வலிக்குது, மேலேயும் தான் - பக்கமெங்கும்தான் - எங்கே என்று சொல்வது?'' ஏதோ இடத்தைக் காட்டுவோமே என்று ஒரு இடத்தைத் தொட்டுக் காட்டுகிறு!

'என்ன மேனே, கீழ் வயிற்றைக் காட்டுகிறு-கீழே என்ருல் பெட்டைதான்!'

நான் ஒரு அவசரக்குடுக்கை! 'என்ன செல்லம் அக்கா! அன்றைக்கு பெடிதான் என்றீர்கள்!'

'பெண் பிரதமராகட்டும் - நாடாளட்டும்-வானில் பறக்கட்டும்- என்ன இருந்தாலும் தலைப்பிள்ளை ஆணுயிருந்துவிட்டால்தான் ஊருக்குள்ளே தலை நிமிர்ந்து உலவலாம்-சபையிலும் முன்னுக்கு நிற்கலாம்- ஒரு நடப்புத்தான்!'

'என்னவோ பிள்ளை எனக்கும் சம்சயம்தான். பார்ப்போம்.

கார் வந்தது, மாமி சின்னக்காவைப் பார்த்துக் கண் கலங்கிறு-நான் கட்டிப் பிடித்துக் கொஞ்சினேன், அழுதும்விட்டேன்.

'இதென்னடி ஏன் இப்ப இதெல்லாம்'- செல்வம் அக்கா என்னை அதட்டினு. ஆக்ரோஷத்துடன் திரும்பி அவவைப் பார்த்தேன். 'அட! அவ கண்களும் பனித்திருக்கின்றனவே?'

'தாயில்லாப்பிள்ளை, அவளைக்கடவுள்கைவிடார். ஏதோ தாய் வேறை-பிள்ளை வேறை சுகபலமாக வந்து இறங்க வேணும், பெட்டை என்ருல் என்ன? எனக்குத் தலைப்பிள்ளை பெட்டை-ஏதோ கெட்டுப் போனேனே?' ஓ! செல்லம் அக்கா எவ்வளவு பெரிய மனுஷி-என்ன ஒரு சுகமான வார்த்தை ஆறுதல்!

'மெல்ல-வலது காலை முதல் வைத்து ஏறு!' அறையில் இருந்த சாமி படங்களை வணங்கி-வெளிச்சுவரில் இருந்த மாமாவின் படத்தையும் கும்பிட்டுவிட்டு காரில் கால் வைத்தவள் - இடது காலைத்தான் முதலில் தூக்கிவைத்தாள். பைத்தியக்காரி! 'கால் மாறினபடியால் பிள்ளையும் மாறித்தான் பிறக்குமோ' எனக்குள் ஒரு கலக்கம்!

கார் சென்றது! செல்லம் அக்கா தங்கிவிட்டா! செல்லம் அக்கா என்ருல் எங்கள் ஊரில் பிரபலமான பெயர்! சூதுவாது அற்ற சீவன் என்று மட்டும் இல்லை! நல்லது கெட்டது-சுப-அசுப காரியங்களில் எல்லாம் ஆள் வெகு கெட்டிக்காரி! ஊரில் அவ இல்லாமல் ஒருகாரியம் நடந்ததில்லை! மற்ற விஷயங்கள் எப்படியோ பிள்ளைப்பேறு விஷயத்தில் அவ சொல்லும் சோதிடம் எனக்கு குழந்தைத்தனமான ஒரு 'ஹொபி!' தெரிந்த பெண்கள் கர்ப்பிணியாயிருந்தால் அவர்களுக்கு என்ன குழந்தை பிறக்கும் என்று கரைக்டாகச் சொல்லிவைப்பா. அவவிடம் இந்த விடுப்புக்கேட்பதில் தனி ஆவல்!

●

சிறுவயதிலேயே தாயை இழந்தவர்கள் நாங்கள்! என்னைவிட இரண்டு வயது மூத்த என் சின்னக்கா-ஒரு தாயைப்போல- 'தாயினும் சாலப் பரிந்து' பாசத்துடன் என்னைப் பேணி வளர்த்தா! அவவிற்கு கல்யாணமானதே ஒரு பெரிய கதை! எங்கள் மாமாவிற்கு அவவில் கொள்ளைப் பிரியம்! அவவைத் தன் மருமகளாக்கி - மகளாக்கி - தான் பேண வேண்டும் என்று ஒரு அடங்காத ஆவல்! சீதன-பாதனம் எதையும் எதிர்பாராமல் அவவை சுவீகரித்தேவிடத் துணிந்தார் அவர்?

ஆனல் அந்தோ! எங்கள் மாமாவின் ஆசை பூர்த்தியாகவில்லை-! 'பொன்மணிதான் என் மருமகள்' என்றுசொன்ன மறுவாரமே அவர் காலன் கை வசப்பட்டுவிட்டார்!

மாமா மரணித்துவிட்டார். இனி எங்கள் சின்னக்காவை மருமகளாக்கி கொள்வார்களோ என்ற அச்சம் எங்களுக்கு! எங்கள் அச்சத்தைப் போக்கி அவவைக் கைப்பிடிக்க முன்வந்தார் அத்தான்! ஆனல் இங்கும் ஒரு சோதனைதான்!

மாமா இறந்து ஒரு வருஷமாகவில்லை! பாசம் மிக்க மாமா! உடனிருந்து நடாத்துவதற்கே அவரில்லை! அவர் இறந்து ஒரு வருஷமாகு முன்பே - கன்னிப்பெண் விஷயம்-கல்யாணத்தை நடாத்திவிட வேண்டுமென்று எல்லோரும் பரபரத்தார்கள்! ஆச்சு மாமா இறந்து ஒரு வருஷமாகு முன்பே-அத்தான் சின்னக்கா கழுத்தில் தாலிகட்டிவிட்டார்!

இத்தோடும் முடியவில்லையே வேதனை? பிதுர் காரியமாகு முன் 'தாலி கட்டியதே தப்பு' என்று பின்னும் ஊரார் உறவினரிடையே ஒரு கிசுகிசுப்பு! ஐயோ மனித மனத்தின் ஆசாபங்கம் என்பதா? சமுதாய சட்டதிட்டங்கள் இவை என்பதா?

இப்படியே வேதனைமிக்க சோதனைகளைத் தாண்டி - தாங்கி - சின்னக்கா விவாகமாகி - இன்று தலைப்பிரசவத்திற்குச் செல்கிறு. சின்னக்காவிற்கு ஆண் குழந்தை பிறந்துவிட்டால்...?

ஓ! அது எங்கள் மாமாவே மீண்டும் வந்து மருமகள் வயிற்றில் பிறந்துவிட்டார். மற்றவர்களைப் போல் தலைச்சன் பெடி-என்ற மிடுக்குக்காக மட்டுமன்றி மாமாவின் மறு பிறப்புக்குமாக சின்னக்காவிற்கு ஆண்குழந்தையே பிறந்திட வேண்டுமென நான் நாளும் தொழுவேன்!

●

செல்லம் அக்காவை மெல்ல அணைத்து-அவவிடம் விஷயத்தைச் சொன்னேன்- 'செல்லம் அக்கா! காரிலே ஏறும்போது சின்னக்கா அவசரத்தில் இடது காலை முதல் வைத்து ஏறிவிட்டா. ஒருவேளை பெட்டைதான் பிறக்குமோ?' என்மனக் குழப்பம் - ஐதிகக் கருத்து - பகுத்தறிவையும் மிஞ்சிய கேள்வியைக் கேட்க வைத்தது.

'சே! காலை மாற்றினுற் போலே - பிள்ளை மாறிப் போமே-? அவளுக்கு பெடிதான் பிறக்கும்- அவளின் குணத்திற்கு தங்கக்கம்பி போலே பெடி பிறக்காவிட்டால் நான் இந்தத் தொழிலையே விட்டு விடுவேனே?'

இது அவ தொழில் அல்ல- அவ ராஜினுமா நோட்டீஸ் கொடுக்க இது அவளின் 'ஹபிற்'

விடிகாலையில்தான் எனக்கு எப்பொழுதும் ஒரு சுகமான நித்திரை வரும். என்னையும் மீறி கண் மெல்ல மூடிவிட்டது இப்படியான ஒருகோழித்தூக்க வேளையில்தான் தொடர்பு- தொடர்பற்ற கனவுகளும் வளரும்!

கார் ஹோர்ன் கேட்டது. விழித்தெழுந்து ஓடி ''என்ன அத்தான்?'' என்றேன். ''அட்மிற் செய்து விட்டுவருகிறேன்- பிறந்தால் டெலிபோன் செய்யச் சொன்னேன்.''-அத்தான் கதைத்துக் கொண்டே படுத்து விட்டார். செல்லம் அக்கா எழும்பி விடைபெற்று!

''எனக்கொருமகன் பிறப்பான்- அவன் என்னைப் போலவே இருப்பான்......''

அத்தான் வெகு உற்சாகமாகப் பாடியபடி வருகிருர். நிச்சயம் மகன்தான் பிறப்பான் என்ற நம்பிக்கையோ அல்லது பாட்டைச் சும்மா பாடுகிருரோ?''

சாப்பிட்டு விட்டு புறப்பட்டார்- ''காற்றினிலே வரும் கீதம்...''- அத்தான் பாடியபடி சைக்கிளில் பறக்கிருர்! செல்லம் அக்கா வந்து ''என்னவாம் மோனை?'' என்ரு. ''இப்போதான் அத்தான் போகிருர்''

செல்லம் அக்கா போய் மறைய அத்தான் பறந்து வருகிருர். ''தம்பி தான்!''

எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி! ''இந்த செல்லம் அக்கா எங்கே போய்விட்டா?''

''ஓ! மாமி வந்துவிட்டா! அவவின் கண்கலங்க வாயைச் சப்பி மிடறு விழுங்கி- முகமெல்லாம் பூவாய் மலர- ''தம்பி தான்'' என்ரு! அவவிற்குத்தான் எத்தனைமகிழ்ச்சி!

ஒருதாய் போல் என்னைப் பேணும் சின்னக்கா இன்று தாயாகிவிட்டா! அவவிற்கென ஒரு குழந்தை பிறந்த பின்பே- நான் பெரிய மனுஷி என்ற தோரணையில் கொஞ்சம் விலகி நிற்கிறேன். சென்ற வாரம் வரை என்தோழி போல் என்னுடன் விளையாடிக்கொண்டிருந்த அவள் இன்று ஒரு கோபுரமாக என் முன் உயர்ந்து நிற்கிறுள்!

வெறிச் சென்றிருந்த வீட்டைக் கலகலப்பாக்கவந்துவிட்டான் குமரன்! அதுதான் குழந்தையின்பெயரும்! சின்னக்காவைப் பார்க்கிறேன்- அவ மெலிந்துவிட்டமாதிரி இருக்கிறு-ஆனல் பூசினுற் போல் ஒருமினு மினுப்பு- பூரிப்பு.

●

ஆடிமாதம்! அனலை அள்ளி வீசும் காற்று! எவ்வளவு நீரைக் குடித்தாலும் 'உயிர்' போகிறமாதிரி நாவரட்சி-; புழுக்கம் வேறு!

கட்டிலில் படுத்திருந்த சின்னக்காவைப் பார்க்க பாவமாக இருந்தது! களைத்துச் சோர்ந்து சருகாகி விட்டிருந்தா!

''மாமி எங்கே?'' -ஈனஸ்வரத்தில் கேட்கிறு!

''கிணற்றடியிலே நிற்கிறு; ஏன்?''

''கொஞ்சம் தண்ணி தருவாயா?''

''ஐயோ மாமி ஏசுவா?''

''உன்னைக் கும்பிடுகிறேன்; இங்கே பார் நாக்கை!'' பாவம் நாக்கு வெள்ளையாக காய்ந்து போயிருக்கிறது,தான் கொஞ்சம் தண்ணீர் வார்த்துக் கொடுக்கிறேன்-! கொஞ்சம் தண்ணீர் எடுத்து முகத்திற்கும் தெளித்து- துடைத்து விடுகிறேன்! இப்போ ஒவ்வொரு நாளும் இந்த சிசுருஷை நடக்கிறது!

அத்தானுக்கும் மாமிக்கும் எனக்கும் மட்டுமா ஆண் குழந்தை பிறந்து விட்டது என்று மகிழ்ச்சி! மச்சானிடம் இருந்து கடிதம் வந்தது, ''எங்கள் ஐயாவிற்கு, தம்பியிலும் மச்சாளிலும் பாசம் அதிகம்! நிச்சயம் அவர் மீண்டும் எங்கள் குடும்பத்தில் வந்து பிறப்பார் என்று எங்களுக்கு பூரண நம்பிக்கை; எங்கள் பிரார்த்தனை பலித்து விட்டது!''

ஓ! எங்கள் உறவினரெல்லாம் குழந்தைப் பிறப்பை- மாமாவின் மறுபிறப்பு என்றே கொண்டாடினுர்கள்!

ஆனல்- அந்தக் குழந்தையைப் பெற்ற தாயின்வேதனை யாருக்குமே புரியவில்லையே!

என் சின்னக்காவின் முகத்தின் சுருக்கம்- எனக்கு பெரும் வேதனையைத் தருகிறது! ஒவ்வொரு நாளும் மத்தியானம் ஒரு கிளாஸ் தண்ணி குடிக்கவும் கொடுத்து பச்சைத் தண்ணியால் முகத்தையும் கழுவி—;

''ஐயோ இதென்ன! அக்காவும் தங்கச்சியும்- நல்லாயிருக்கிறது- பச்சை உடம்பிலே பச்சைத் தண்ணி படலாமே-? இன்னும் ஒரு கிழமையாகவில்லை-''

எங்களுடைய மாமி பொல்லாதவ! ''நாளைக்கு ஒன்று வந்தால்-?'' ''தாயில்லாப் பிள்ளையை மாமியார் கவனிக்கவில்லை'' என்று மற்றவை சொல்லவோ?''

''ம்- அவவிற்கு மருமகளில் பாசம் இல்லை- மற்றவர்களுக்குப் பயந்துதான்...;

எனக்குள் ஓர் ஆவேசம்- படபடப்பாக ஏதேனும் சொல்ல வேண்டும் போல்- வாய் விட்டு அழவேண்டும் போல்.

மாமியைத் திரும்பிப்பார்க்கிறேன்- அவ தன் கண்ணீரைத் துடைத்தபடி போகிறு!

நான் திடுக்கிட்டு விட்டேன் 'ஏன் சின்னக்கா, மாமி அழுகிறு?''

''பாவம் அவ! மாமா இறந்து ஒரு வருஷமாகு முன்னர் என்னுடைய கல்யாணம் நடந்தது. எத்தனையோ பேர் ஒவ்வொன்று சொன்னுர்கள்! பிள்ளைப்பேறு விஷயத்தில் ஏதேனும் இசக்குப் பிசக்காக நடந்தால் அதைத்தான் சொல்லுவார்கள்! தாயில்லாப்பிள்ளையை மாமியார் கவனிக்க வில்லை என்றும் சொல்வார்கள்! பாவம்அவ நல்லவ!

மாமிக்கு என்னிலே எவ்வளவு பாசம் தெரியுமா? நான் ''லேபர் ரூமால்'' வரும் போது மாமி வெளியே நின்று அழுகிறு- என்னைக் கண்டதும் சிரித்தபடியே ''நீர் கஷ்டப்பட்டு'' எங்களுடைய ஐயாவைக் கூட்டி வந்துவிட்டீர்'' என்ரு!

ஓ! சின்னக்காவின் பிரசவ வேதனையைவிட வெளியில் நின்று அழுது-தொழுத மாமியின் மனவேதனை பெரிதுதான்! அந்தப் பதிவிரதை தெய்வத்தின் உருவம் என் மனத்திரையில் என்- தாயகி விட்டசின்னக்கா எனும் கோபுரத்தை விட மிகப் பெரிய ஒரு கோபுரமாக வளர்ந்து உயர்ந்தது! ''பொல்லாதவ என்றுநான் எண்ணிய மாமி-''

(9-ம் பக்கம் பார்க்க)





## மலையாள மாந்தரீகம்

மலையாள மாந்திரீகத்தில் புகழ்பெற்று விளங்கும் யாராலும் மறக்க முடியாத புதுமைப் பெயர்

### ''நீலன் கந்தசாமி''



பணம் அனுப்ப வேண்டாம். கைகூடிய பின் கட்டும் இலவச விபரங்களை எழுதிப்பெறவும்.

**வசியம்! வசியம்!!**

எதிர்பார்த்த இளைஞர்கள், யுவதிகள் எவ்வளவு தொல்லைகள் இருப்பினும் 3 நாட்களில் வசியமாக்கித் தருவேன். போனவரை திரும்ப எடுப்பித்துத் தருவேன். இருவரின் பெயர் விபரங்களுடன் எழுதவும்.

தொழில் கிட்ட விவாகங்கள் கெதியில் கைகூட, பரீட்சையில் சித்தியுற சுவிப் அதிர்ஷ்டம் பெற, கண் திருஷ்டி, நாதிருஷ்டி, கிரகதோஷங்கள் நீங்க, வழக்கில் வெற்றிபெற மருந்தால் சுகப்படுத்த முடியாத நோய்களுக்கு ஒரு கை வெற்றிலையில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதை எமக்கு அனுப்பி எமது விபரங்களைப் பெறவும்.

## நீலன் கந்தசாமி,

21, மீவத்தகும்புர ரோட் — மாத்தளை

MATALE.


# வெங்காயத்தண்டு கோதியும் மிளகாய் இலை அரிபுழுவும்

தற்பொழுது யாழ்ப்பாணக் குடாநாட்டில் பரவிவரும் வெங்காயத்தண்டு கோதி, நாட்டில் மக்களுக்கு பெரும்பான்மை சேதம் விளைவித்துக் கொண்டிருக்கிறது. இதன் பாதிப்பிற்கு இலக்கான பயிர்கள் வெங்காயம், மிளகாய், பீற்றூட், கத்தரி, கொடிமுந்திரிகை, குரக்கன் என்பனவாகும். ஆனாலும் எதிர்காலத்தில் இப்பூச்சியின் எண்ணிக்கை அதிகமாகும்பொழுது புகையிலையும் இதன் பாதிப்பிற்குள் அதிகமாக உள்ளாகும். என்று உயிரியலாளர்கள் கருதுகின்றனர். அத்தோடு எச்சரிக்கையும் விடுக்கின்றனர்.

இந்நிலையில் நாம் விவசாயமே எமது குடாநாட்டின் முதுகெலும்பாகக் கொண்டு வாழும்பொழுது நாம் விளைவிக்கும்பயிர்களின் எதிரியாகிய இப்புழுவைப்பற்றி தெரிந்துகொள்ளுதலும் அவ்வெதிரியை அழிக்கக்கூடிய வழிவகைகளைக் கையாளுதலுமே நமது சிந்தனையும் செயலுமாதல் வேண்டும்.

இதன் அந்து பார்ப்பதற்கு சிறிதாகவும் சாம்பல் நிறமுடையதாகவும் இருக்கும். குறிப்பாகக் காட்டக்கூடிய வெளி அடையாளங்கள் எதுவும்இதன் இறக்கைகளில் இல்லை. பகல் வேளைகளில் இடத்திற்கிடம் பெயர்ந்து தாவரங்களின் அடியில் அல்லது குப்பை கூழங்களின் அடியில் மறைந்து வாழும். இரவானதும் தனது எதிர்கால குஞ்சுகளுக்கு உணவாகக்கூடிய தாவரங்களின் இலைகளில் முட்டை இடும். முட்டைகள் சாதாரணமாக குண்டூசியின் தலையின் பருமனளவு உருண்டையாகஇருக்கும். முட்டைகளை கூட்டமாக இலைகளில் இட்டு அந்து தனது மெல்லிய ரோமங்களால் முட்டைகளை மறைத்துவிடும்.

ஓர் அந்து ஒருநாளில்சுமார் 1000முட்டைகள் வரைஇடும், முட்டைகள்சூரியவெப்பத்தால் 4, 5 நாட்களில் குஞ்சுகளாகும் குஞ்சுகள் சிறிதாக இருக்கும பொழுது விவசாயிகள் கண்களுக்குத் தெரியாது. எனவே விவசாயிக்கு தனது எதிரியை




அதன் இளவயதில் கொல்வதற்கு முடிவதில்லை குஞ்சுகள் இளமைப்பருவத்தில் கூட்டமாகத் திரியும் குஞ்சுகள் பல பருவங்களை உடையன. மத்திய பருவம் தொடக்கம் கூண்டுப் புழுக்கள் கூண்டுப்புழுவான புழு நிலையை அடையும் வரை இவை பெருமளவு அவைகள் இருக்கும் பயிர் வகைகளையே உணவாக உண்ணும் புழுக்களின் பெருக்கம் கூடுதலான நிலையை அடையும் பொழுது, பயிர்களின் சேத எண்ணிக்கை பெருமளவாக இருக்கும்.

அப்பொழுது தான் விவசாயி தனது எதிரியை காண்கின்றான். இந்தநிலையில் எந்தவிதமான கிருமிநாசினியைக் கொண்டும் இப்புழுவை கொல்ல முடியாது.

நிலை அடைந்ததும் நிலத்தினுள் மறைந்து தன்னைப்பாது காக்கக் கூடிய போர்வை ஒன்றால் மறைத்து உறங்குநிலையை அடையும். உறங்குநிலை 7 தொடக்கம் 10 தினங்கள் வரை இருக்கும். மறுபடியும் கூண்டுப்புழு உடைபட்டு இறக்கைகள் கொண்ட அந்துவாக வாழ்வைத் தொடங்கும், ஒரு வருடத்தில் 4 அல்லது

5 சந்ததிப்பெருக்கம்உண்டாகும் என உயிரியலாளர்கள் தெரியப்படுத்துகின்றனர்.

இப்பூச்சியை அழிப்பதற்கு உடனடியாக கொல்லும்தொடு நாசினிகளான 'சுமிசிடீன்', 'அம்புஸ்' போன்றவைகளை தெளித்தும் இளம் புழுக்களை கொல்லுவதற்கு 'பேருசீல்' 'வொலற்ரான்' 'லோஸ்பான்' போன்றவைகளை குறித்த அளவிற்கு மேற்படாது தெளித்தல்வேண்டும்.

மூக்கறைச்சிகிரை, முள்ளுக்கீரை, நாய்க்கடுகு, தயிர்வளை போன்ற களைகளை நீக்குதல் வேண்டும்.

மைனு, காகம், தாரா போன்றவைகளும் தாராளமாக பூச்சி பெருந்தொகையாக இருக்கும் இடங்களில் உணவு உண்ணுதலை ஊக்குவித்தல் வேண்டும்.

பெருந்தொகையான பூச்சி நாசினிகளை யாழ்ப்பாண மக்கள் அளவிற்கு மேல் பாவிப்பதினால் நன்மைதரும் பூச்சிகளை கொன்றதினாலும் பயிர்ச் செய்கை முறை வேறுபாடடைந்ததினாலும் இப்புழுக்களின் தொகை அதிகரிப்பதற்கு முக்கிய காரணங்கள் என உயிரியலாளர்கள் கருதுகின்றர்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி ஆகியவர்களின் உதவியுடன் திருநெல்வேலி ஆராய்ச்சிப் பிரிவினர் இந்தப் பூச்சியைக் கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு கிருமிநாசினிகளையும் கொண்டு பரிசோதனைகள் நடத்திவருகின்றனர். லங்கம்ஸ், ஹேச்சம்ஸ், சி. ஐ. ஏ. ஆகிய நிறுவனங்கள் இப்பரிசோதனைக்கான ரசாயனங்களை வழங்குவதை விரைவுபடுத்தியுள்ளன. சில ரசாயனங்களை விமானத்தில் தருவிக்கவும் இந்த ஸ்தாபனங்கள் ஏற்பாடுசெய்துள்ளன. இந்த முயற்சியில் லயன்ஸ் போன்ற சேவா ஸ்தாபனங்களும் உதவியளிக்க முன்வந்துள்ளன. இந்த முயற்சியில் பருத்தித்துறை முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. துரைரத்தினமும் ஒத்துழைத்து வருகின்றார்.

திருநெல்வேலி ஆராய்ச்சி நிலையம் அதன் உயிரியலாளர்களின் ஆலோசனையுடன் இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்தப் பூச்சியைக் கட்டுப்படுத்துதல் முயற்சிக்கு உதவுவதில் அரசாங்க அதிபர் பூரண ஒத்துழைப்பு அளித்துவருகிறார்.

தொகுத்தவர்:

**எஸ். பத்மநாபன்**

யாழ். லயன்ஸ் கழக விவசாயக் குழுத்தலைவர்

(தகவல்: திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம்)

---

## கலையுலகத் தொடர்புகள்— 24

# என் காருக்கடியில் நுழைந்து 'சோ' பழுதுபார்த்தார்!

சோவை முதன் முதலில் படத்தில் பார்த்தவர்கள் இவர் எப்படி சினிமாவில் முன்னேறினர் என்று வியப்படைவார்கள். சிவாஜி நடித்த ஒரு படத்தில் ஒரே ஒரு கட்டத்தில் வந்து போன சோ, அவர் இல்லாமல் அவருடைய நகைச்சுவை இல்லாமல் படம் ஓடாது என்றஅளவிற்கு தனக்கென ஒரு பாணியை வகுத்து தமிழ் திரையுலகில் நல்லதோர் ஸ்தானத்தையும் பிடித்துக் கொண்டுவிட்டார். அதிகமான படங்களில் மனோரமாவோடுநடித்ததால், தயாரிப்பாளர்களும் இவர்களையே ஜோடி சேர்த்து படம் எடுத்தார்கள். இதனால் இந்த சோ–மனோரமா ஜோடியைக்காண இலங்கை ரசிகர்கள் ஏங்கித் தவித்ததில் தவறெதுவுமில்லை. ஆனால் தமிழ்நாட்டிலிருந்துவரும் கலைஞர்களுக்கு முக்கியமாக சினிமாவோடு சம்பந்தப்பட்டவர்களுக்கு விசா வழங்குவதில் ஒரு நிபந்தனையோடுதான் விசாவளங்கி வந்தார்கள்; வருகிறார்கள் எமது அரசினர். இதனால் சோ மனோரமா இலங்கைக்கு வந்ததும் இந்த நிபந்தனையோடுதான் அதாவது இலங்கையில் தங்கியிருக்கும் பொழுது பணம் சேர்ப்பதற்காக நடாத்தப்படும் எவ்வித கலை நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளக் கூடாது. ஆனால் உண்மையில் சோ - மனோரமாவை இலங்கைக்கு அழைத்தவர்கள் தாங்கள் நடாத்தும் அதுவும் பணம் வசூலித்து நடாத்தும் ஒரு கலைநிகழ்ச்சியில் மேடையில் தோன்றுவதற்காகவே அழைத்திருந்தார்கள். சோ ஒரு சட்டத்தரணி. இந்த சட்ட நுணுக்கங்களில் தவறினால் ஏற்படும் தலைவேதனையை நன்கு உணர்ந்தவர். அதனால் அந்த நிபந்தனையோடு எங்களை வரவழைத்த படியால் நீங்கள் நடாத்தும் கலை நிகழ்ச்சிப்பக்கம் தலைகூட காட்ட மாட்டோம் என்று கூறிவிட்டார். அழைத்து வந்தவர்களுக்கு தர்மசங்கடமாகி விட்டது. அழைத்தவர்களும் சோ-மனோரமா தங்குவதற்கு அதிக வாடகை இல்லாத ஒரு ஹோட்டலைத்தான் ஒழுங்கு செய்திருந்தார்கள். அந்த ஹோட்டலில்தான் சோ மனோரமா ஆகியோரை சந்தித்தேன். இவர்களோடு ஒருபடத் தயாரிப்பாளரும் டைரக்டர் சீனிவாசனும் வந்திருந்தார்கள், கலை நிகழ்ச்சியில் கலந்துகொள்ளாததால் தங்கள் இஷ்டப்படி கொழும்பு சுற்றிப் பார்க்க திட்டம்போட்டார் சோ. அந்தச் சமயம் என்னிடம் ஒரு பியட் கார் இருந்தது. சோவிடமிருந்ததும் பியட்கார். அதனால் என்னை ஓட்டவிடாமல் தானே என் காரை ஓட்ட ஆரம்பித்து விட்டார். அப்பொழுது சோவிற்கு தலைமயிர் இருந்தது. ஆனால் அவரை கடைசியாக சந்தித்த பொழுது சரியான வழுக்கை. தலைமயிரோடு இருந்த சோவை பலர் அடையாளம் கண்டு கொண்டார்கள். அவர் நம்மை ரசிகர்கள்கண்டுகொண்டு விட்டார்கள். இன்று கலை நிகழ்ச்சியில் தோன்றுவோம் என எதிர்பார்ப்பார்கள் பாவம்; நாம் என்ன செய்ய முடியும். யாருக்காகவோ போட்ட சட்டம் கடைசியிலே நம்மளையே தாக்கியிடுச்சு என்று அங்கலாய்த்துக் கொண்டு காரை ஓட்டினார். கலை நிகழ்ச்சி நடக்கும்பக்கமே தலைகாட்ட மாட்டேன் என்ற சோ அன்று மாலை கலை நிகழ்ச்சி நடக்கும் இடத்திற்கு

எஸ். பி. மயில்வாகனன்

[10-ம் பக்கம் பார்க்க[

---

## ஞானத்தமிழ் — 26

# அண்டரும் தொண்டரும்

தேவர்கள் தாம் முற்பிறவிகளில் செய்த நல்வினைகள் காரணமாக அந்தப் பதவியைப் பெற்றவர்கள். ஆனால் இறை தொண்டர்களைப் போலத் தெளிந்த உள்ளமுடையவர்கள் அலல். அவர்கள் ஐம்புலன்களின் ஆட்சிக்குட்பட்டவர்கள். தாம் இன்பத்தை அனுபவிக்க வேண்டும், தாம்தலைவர்களாக வேண்டும், தம்மை மற்றவர்கள் வணங்க வேண்டும் என்னும் சிந்தனையுடையவர்கள் தம்முடைய இந்த நோக்கங்கள் நிறைவேறும் பொருட்டாகவே இறைவனை வணங்குவார்கள்.

> ''வாழ்த்துவதும் வானவர்கள்
> தாம் வாழ்வான்
> மனம்நின்பால்
> தாழ்த்துவதும் தாம் உயர்ந்து
> தம்மை எல்லாந்
> தொழவேண்டி''

என்னுந் திருச்சதகச் செய்யுள் இதனை நன்கு விளக்குகின்றது.

பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள் தொண்டர்கள் அவர்கள் தலையால் இறைவனை வணங்குவார்கள், காதால் அவன் புகழைக் கேட்பார்கள், நாவால் அவன் புகழ் பாடுவார்கள். கண்களால் இறைவன் உருவத்தையே எங்கும் காண்பார்கள். மூக்கால் முரல்வார்கள், மெய்யால் இறைவன் தன்மையை உணர்வார்கள். இவ்வாறான அடியார்களின் உள்ளம் புகுந்து ஒளியாய் வீற்றிருப்பான இறைவன், தேவர்களுக்கு அவர்கள் வழிபாட்டுக்கிரங்கி அவர்கள் வேண்டிய வரங்களைக் கொடுத்தலும் தொண்டர்கள் போல முழுவதாக அறிந்து கொள்ள முடியாத இருளாகவே விளங்குகின்றான். இதனைத் திருக்கோவையாருள்

> ''பொருளா வெனைப்புகுந்
> தாண்டு
> புரந்தரன் மாலயன்பால்
> இருளா யிருக்கு மொளிநின்ற
> சிற்றம் பலமெனலாஞ்''

என்னும் செய்யுளடிகளில் மணிவாசகர் தெளிவாக விளங்குகிறார். வேறுபட்ட நிலையில் உள்ள வழிபாடு காரணமாக தேவர்களுக்கு துன்பம் ஏற்படுகிறது. அடியார்கள் நிலையோ ''இன்பமே என்னுளும் துன்பமில்லை'' என்பதாகும்.

தேவேந்திரனது குமாரன் சயந்தன் அவனுக்குச் அசுரர்களால் தாங்கமுடியாத துன்பம் ஏற்பட்டது. அவன் அப்போது என்ன நினைக்கிறான் அண்டர் பதவி போதும் தொண்டராக வேண்டும் என நினைக்கிறான்.

குகசர்மா

(9-ம் பக்கம் பார்க்க)

## சட்டமும் சமுதாயமும் — 18

# "கைமேற்பலன் காணவிட்டால், திருப்பியனுப்புங்கள் பணம் திருப்பித்தரப்படும்"

கறுப்பன் கந்தசாமி, சிவப்பன் சின்னச்சாமி என்ற பேரில், பலர், பலவிதமான விளம்பரங்களைச்செய்து சவால் விடுகிறார்கள். மாறாத நோயையெல்லாம் மாற்றவும், தீராத தீங்கையெல்லாம் தீர்க்கவும் தம்முடைய அவுடதங்களுக்கு ஆற்றல் உண்டு என்று அவர்கள் விளம்பரங்கள் போடுகிறார்கள். ''தின்டுபார்த்தபிறகு காசு'' என்று தோடம்பழக்காரன் யாழ்தேவிக்குள்ளே சொல்லுமாப்போல, இவர்களும் ''கைமேற்பலன் காணவிட்டால், மருந்தை (அல்லது மருந்து முடிந்துவிட்டால் மருந்துப் புட்டியை) திருப்பியனுப்புங்கள் பணம் திருப்பித்தரப்படும்'' என்று துணிச்சலோடு சவால் விடுகிறார்கள். பாவித்தும் பயன்காணவிட்டால், பயன்காணாதவருக்கு ஆயிரம் ரூபா இனாமாகக் கொடுக்கப்படும் என்று இலங்கையில் இந்த ''விண்ணன்கள்'' எவரும் விளம்பரம் செய்ததாகக் கட்டுரையாசிரியனுக்கு ஞாபகம் இல்லை. அப்படி விளம்பரஞ் செய்திருந்தாலும், விளம்பரம் பொய்யென்றறிந்தவுடனும், விளம்பரஞ் செய்தவர்களுக்கெதிராக வழக்குத் தொடுப்பதற்கான திராணி நம்மவருக்கில்லை; இதனால் கறுப்பன் கந்தசாமிகள் பலர் இலங்கையில் பெருகி வருவதுமல்லாமல், கொழு கொழு என்று கொழுத்தும் வருகிறார்கள்.

இங்கிலாந்திலோ நிலைமை வேறு. பேய்ச்சேட்டை விடுபவர்கள், அங்கு சேட்டை விட்டுத் தப்பமுடியாது.

இங்கிலாந்திலே 1890ஆம் ஆண்டளவில் கற்பூர உருண்டைக் கொம்பனி என்று ஒரு கொம்பனி இருந்தது. அவர்கள் புளுக்காய்ச்சலைக்குணப்படுத்துவதற்கான ஒரு உருண்டையைத் தயாரித்து விற்பனை செய்து வந்தார்கள். நல்ல வியாபாரம்: கற்பூர உருண்டைக்கு நாளுக்குநாள் கிராக்கி ஏறிக்கொண்டே வந்தது. இது கண்ட கொம்பனியார், தமது உருண்டை வியாபாரத்தை மேலும் செழிப்பாக்க விரும்பி, புதினத்தாளிலே ஒரு விளம்பரத்தை வெளியிட்டார்கள். ''ஒரு நாளைக்கு மூன்றுவேளையாக, இரண்டுவார காலத்திற்கு எமது கற்பூர உருண்டையைப் பாவித்தபின்னர் எவருக்கேனும் புளுக்காய்ச்சல் வருமானால், அவருக்கு ஆயிரம் பவுண் கொடுக்க நாம்தயார். இது வெறும் ''புலுடா வல்ல'' என்று விளம்பரப் செய்தார்கள். தம்முடைய விளம்பரக்கூற்று நேர்மையானது, அந்தரங்க சுத்தியானது என்பதை வெளிக்காட்டும் வண்ணம் ஆயிரம் பவுனை ஒரு வங்கியில் அந்த நோக்கத்துக்கென வைப்பிலிட்டார்கள்.

**செ. சிறீக்கந்தராசா**

பீனிசந்தை உடன்பிறப்பாக உடைய காளையர் என்பவர் இந்த அதியற்புத கற்பூர உருண்டையைப் பாவித்தால் புளுக்காச்சலிலிருந்து விடுதலை பெறலாம் என்று நம்பி, விளம்பரத்திற்சொல்லப்பட்ட வாறு, வேளைதவறாமல் உண்டும் முகர்ந்தும் வந்தார். பதினான்கு நாட்களுக்கு; பதினைந்தாம் நாள் கடந்தது. பதினாறும் நாளும் போனது; பதினேழாம் நாள், சொல்லிவைத்தாற்போல புளுக்காய்ச்சல் காளையரைப் பற்றிக்கொண்டது; தம்பி மோசம்போனேனே என்று புறுபுறுத்தார்.

காய்ச்சல் மாறும்வரை காளையர் கோபத்தை அடக்கிக் கொண்டிதந்தார். காய்ச்சல் மாறியதும் தமது குடும்ப வழக்கறிஞரிடம்போய் ஆலோசனை கேட்டார். ஆயிரம் பவுண் கோரி வழக்குத்தொடுக்கும்படி ஆலோசனை கூறினார் வழக்கறிஞர்; வழக்குத் தொடுத்தார் காளையர்.

அலைழப்புக் கட்டளை போனதும், கர்ப்பூர உருண்டைக் கொம்பனியார் திகைத்தனர். காளையருக்கும் தமக்கும்இடையில் ஒப்பந்தம் எதுவும் இல்லையென்பது, எதிராளியாகிய கொப்பனியின் வாதம். புதினத்தாளிலே போட்ட விளம்பரம், ஒரு முனைவு ஆகாது என்றும், தனிப்பட்ட எந்த ஒருவரை நோக்கியும் அந்தமுனைவு செய்யப்படவில்லை என்றும், இல்லாத முனைவை இருப்பதாகப்பாவித்து, அதனை ஏற்பது வடிகட்டிய பைத்தியக்காரத்தனம் என்று கொப்பனியார் வாதிட்டனர். வழக்கை விளங்கிய நீதிபதி திணறினார். அந்த நீதிபதியுடைய நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்காமல், நானே நீதிபதியென்றால் போன்று தீர்ப்பைக் கூறிவிடுகின்றேன்.

கொம்பனி, செய்தித்தாளில் போட்ட விளம்பரம், வெறும் ''தம்பட்டம்'' என்றோ வண்டவாளம் என்றோ ''புலுடாப்புளுகு'' என்றோ கூறிவிட முடியாது. ஏனென்றால், தம் விளம்பரம் அந்தரங்கசுத்தியானது என்பதை உலகுக்குக் காட்டுவதற்காக ஆயிரம் பவுனைஅவர் வங்கியில் வைப்பிலிட்டிருக்கிறார். இது முக்கியம்.

(9ம் பக்கம் பார்க்க)

### விளக்கம் தேவையா?

சட்டமும் சமுதாயமும் என்ற தலைப்பில் திரு.செ. சிறீக்கந்தராசா அவர்கள் எழுதிவரும் கட்டுரைத் தொடரில் இதுவரை 20 கட்டுரைகள்வரை பிரசுரமாகியுள்ளன. இக்கட்டுரைத் தொடருக்கு வாசகர் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்து வருகின்றது. கட்டுரை ஆசிரியர் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தது போல் கட்டுரையின் ஏதாகிலும் அம்சங்கள் குறித்து விளக்கம் தேவையெனகருதும் வாசகர்கள் எமக்கு எழுதலாம். அவைகளுக்கு கட்டுரை ஆசிரியர் விபரமாக விளக்கம் அளிக்கசித்தமாய் இருக்கிறார் என்பதை அறியத்தருகின்றோம். —ஆர்

# கணபதி வணக்கம்

(18) வரகணபதி: செவ்வண்ணர், யானைமுகவர், முக்கண்ணர், பாசம், அங்குசங்களைத் தரித்தவர். தேன்நிறைந்த மண்டையையுடையவர். பிறைமுடியர்.

(19) திரயாக்ஷர கணபதி, அசைகின்ற செவிகளில் சாமரையணிந்தவர். பொன்னிறமானவர். நான்கு கரங்களையுடையவர். பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தாங்கியவர். துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

(20) க்ஷிப்ரபிரசாத கணபதி: பாசம், அங்குசம், கல்பலதை, மாதுளம்பழம், தாமரை, தருப்பை விஷ்டரம் இவற்றைத் தரித்தவர், திருவாபரணங்களை அணிந்தவர். பேழை வயிற்றையுடையவர்.

(21) ஹரித்திரா கணபதி; மஞ்சள் நிறமானவர், நான்கு கரங்களையுடையவர். அவற்றில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம் இவற்றைத் தரித்திருப்பவர்.

(22) ஏகதந்த கணபதி: பேழை வயிற்றுடன் நீலமேனியர். கோடரி, அட்சமாலை, லட்டு, தந்தம் இவற்றையுடையவர்.

(23) சிருஷ்டி கணபதி: பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் ஏந்தியவர். பெருச்சாளி வாகனத்தையுடையவர். சிவந்த திருமேனியர்.

(24) உத்தண்ட கணபதி: நீலம். தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்புவில், ரத்தினகலசம், பாசம், நெற்கதிர், மாலை இவற்றையேந்திய பத்துக்கைகளை உடையவர். அழகிய தாமரைப் பூவை ஏந்திய பச்சைமேனியளாகிய தேவியால் தழுவப் பெற்றவர்.

(25) ரணமோசன கணபதி: பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் இவற்றைத்தரித்தவர். வெண்பளிங்குபோன்ற மேனியர். செந்நிறப்பட்டாடையுடுத்தியவர்.

(26) துண்டி கணபதி: அட்சமாலை, கோடரி, ரத்னகலசம், தந்தம் இவற்றை ஏந்தியவர்.

(27) துவிமுக கணபதி: தந்தம், பாசம், அங்குசம், ரத்னபாத்திரம் இவற்றைச் கையில் ஏந்தியவர். பசுநீலமேனியர். செம்பட்டாடையும் ரத்தின கிரீடமும் அணிந்தவர். இருமுகம் உடையவர்.

(28) மும்முக கணபதி: வலது கைகளில்கூரியஅங்குசம், அட்சமாலை, வரதம் இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுதகலசம், அபயம் இவற்றை உடையவர். பொற்றாமரை ஆசனத்தின் நடுப் பொகுட்டில் மூன்று முகங்களோடு எழுந்தருளியிருப்பவர். புரசம்பூப் போன்ற சிவந்த நிறம் உடையவர்.

(29) சிங்க கணபதி: வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வரதம் இவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, ரத்னகலசம், பூங்கொத்து, அபயம் இவையமைந்தஇடது கைகளையுடையவர். வெண்ணிறமான மேனியர். யானைமுகவர். சிங்கவாகனத்தில் எழுந்தருளியிருப்பவர்.

(30) யோக கணபதி: யோகநிலையில் யோகபட்டம் தரித்துக்கொண்டு இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு இந்திரநீலம் போன்ற ஆடைய உடுத்திக்கொண்டு பாசம், அக்ஷ

(9-ம் பக்கம் பார்க்க)

தொகுத்தவர்;
"முருகு"

பரீட்சையில் சித்திபெறவேண்டுமா?

# ஒப்புநோக்கி ஞாபகசக்தியை வளர்த்தல்

**க. குகதாசன்**

### 5. ஒன்றுபடுத்துதல்

கருத்துக்கள் ஒரு சங்கிலிக்கோவைபோல் தொடர்பாகவிருந்தால், அவற்றை இலகுவில் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளமுடியும். அத்துடன் விடயங்களை ஒப்பு நோக்குவதன்மூலம் அவற்றை ஞாபகம் வைத்துக்கொள்ள முடியும். உதாரணமாக 'ஓமின்' விதியை ஞாபகம் வைத்திருப்பதற்கு அவ்விதி கண்டுபிடிக்கப்படாவிட்டால், விஞ்ஞான வளர்ச்சி எவ்வாறு தடைப்பட்டிருக்கும் எனச் சிந்தித்தல்வேண்டும். இலங்கையினது விஸ்தீரணத்தை ஞாபகம் வைத்துக்கொள்ளவிரும்பினால், வேறோர் நாட்டு விஸ்தீரணத்துடன் இலங்கையினது விஸ்தீரணத்தை ஒப்பிட்டுப்பார்த்தல் வேண்டும். இலங்கையினது விஸ்தீரணத்தை இங்கிலாந்துடன் ஒப்பிடும்போது எவ்வளவு? இலங்கையினது விஸ்தீரண அளவுடைய வேறு ஏதாவதோர் நாடுண்டா? இந்தியாவிலுள்ள தமிழ்நாட்டிலும்பார்க்க இலங்கை பெரியதா? சிறியதா? இந்தியத் தமிழ் நாட்டினது விஸ்தீரணம் சுமார் 50,000 சதுர மைல்கள். இலங்கையினது விஸ்தீரணம் சுமார் 25,000 சதுர மைல்கள். ஆகவே இலங்கையினது விஸ்தீரணம் இந்தியத் தமிழ்நாட்டினது விஸ்தீரணத்திலும் பார்க்கச் சரிபாதியாகும். மேலும் எனது தம்பியினது வயதுடன் (25) மூன்று வட்டங்களைக் (000) கூட்டிப்போட்டால் வரும் சதுரமைலே இலங்கையினது விஸ்தீரணமாகும். பொன்னையாவினுடைய காரினது இலக்கும் 3353. வடமாகாணத்தின் விஸ்தீரணமும் பொன்னையாவின் கார் இலக்கமும் ஒன்றே. கிழக்கு மாகாணத்தின் விஸ்தீரணம் 3115 சதுரமைல்கள் ஆகும். ஆகவே கிழக்கு மாகாணம், வடமாகாணத்தைவிடக் கொஞ்சம் சிறியது. இவ்வாறு அலசி ஆராய்ந்து ஒப்புநோக்கும் விடயங்கள் யாவும் நன்றாக ஞாபகத்திலிருக்கும்.

### 6. நினைவூட்டும் வாசகம்

நினைவூட்டும் வாசகம் ஒன்றினை தெரிந்து வைத்துக் கொண்டால் அவ்வாசகத்திலிருந்து தேவையான விபரங்களைப் பெருக்கிக்கொள்ளலாம். உதாரணமாக வட அமெரிக்காவின் பிரதான ஏரிகளை ஞாபகம் ஊட்டவல்ல நினைவூட்டு வாசகம் Homes ஆகும். Homes என்ற சொல் ஞாபகம் வந்ததும் வட அமெரிக்கப் பிரதான ஏரிகள் Hurton, Ontario, Michigan, Eerie, Superior என்பவை ஞாபகத்தில் உதித்திடத் தடையேதும் இருக்கமாட்டாது.

### 7. மறு பகர்ப்பு

படித்தபாடங்களைமறுபகர்ப்பு செய்வதனால் ஞாபகசக்தி அதிகரிக்கும். படித்த பாடங்களை மனதில் எண்ணிக்கிரகிக்க முயற்சிசெய்தல், வினாக்களுக்கு விடை எழுதி அவ்விடைகளை பாடப்புத்தகத்துடன் ஒத்துப் பார்த்தல் முதலிய பயிற்சி மூலம் ஞாபக சக்தியை அதிகரிக்கலாம்.

### 8. சோம்பல்

ஏதாவது ஓர் பாடத்தில் நீங்கள் வெறுப்புணர்ச்சி பூண்டால் அப்பாடம் சம்மந்தமானவற்றை ஞாபகத்தில் வைத்தல் அவ்வளவு சுலபமன்று. 'இப்பாடத்தினைப் பயிலுவதினால் என்ன பயன்?' என்ற வெறுப்புடன் கல்வி பயின்றால் அப்பாடம் சம்பந்தமானவற்றை ஞாபகத்தில் வைத்திருக்கமுடியாது. விருப்புடன் செய்யும் கருமங்கள் யாவற்றினையும் நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம். வெறுப்புடன் ஆற்றும் கருமத்திற்கும் ஞாபகசக்திக்கும் இடைவெளி வெகுதூரம்.

### சோதனை நுணுக்கங்கள்

#### 1. சோதனைக் காய்ச்சல்

சோதனை அண்மித்ததும், சில மாணவர்கள் மத்தியில் 'சோதனைக் காச்சல்' தோன்றிவிடும். நன்றாகப் படிக்கவில்லையே! சோதனையில் சித்தியடையமாட்டேனே? என்ற ஐயத்திடன் காட்சிதருவோர் மத்தியிலே சோதனைக்காச்சல் தோன்றிடும். ஆகவே சோதனைக்காச்சலை விரட்டுவதற்கு ஒரேயொருவழி நன்றாகப் பயின்று சோதனையில் சித்தியடைவேன் என்ற வெற்றிமனப்பான்மையுடன்

(9-ம் பக்கம் பார்க்க)



## தந்தை செல்வா

# மரணப்படுக்கையிலும் போராட்டத்தை கைவிடவில்லை!

தமிழ் இனத்துக்காகவும் தாம் மேற்கொண்ட இலட்சியத்திற்துக்காகவும் வாழ்நாள் முழுவதும் போராடி வந்த மூதறிஞர் செல்வநாயகம் இறுதியில் மரணத்துடனும் நீண்ட போராட்டம் ஒன்றை நடத்தி விட்டே மறைந்துள்ளார்.

யாழ். ஆஸ்பத்திரியில் முப்பத்திநான்கு நாட்கள் மூர்ச்சை தெளியாமல் படுத்திருந்த தந்தையவர்கள் முப்பத்தைந்தாவது நாள்—

கடந்த ஏப்ரல் மாதம் 26ம் திகதி இரவு செல்வா தமது இறுதி ஜீவமரணப் போராட்டத்தை நடத்தியிருக்கிறார்.

அன்று மாலையிலிருந்தே செல்வாவின் உடல்நிலையில் மாற்றம் தென்பட்டது.

டாக்டர்கள் வைத்தியநிபுணர்கள் எல்லோரும் அழைக்கப்பட்டனர்.

நேரம் இரவு 7-30மணி

தமிழ்மக்களின் இதயங்களில் குடிகொண்டிருந்த அந்த மகானின் இருதயம் திடீரென நின்றுவிட்டது.

டாக்டர்கள் உஷாராகினர்—

தந்தையின் இதயத்தை மீண்டும் இயங்க வைப்பதற்கு அவரை உயிர் ஆபத்திலிருந்து மீட்பதற்காக டாக்டர்கள் தமது நிபுணத்துவத்தை எல்லாம் துரித கெதியில் பயன்படுத்தினர்கள்—

அதில் வெற்றியும் கண்டார்கள்.

ஆம் அவர்களின் முயற்சி வீண்போகவில்லை.

டாக்டர்களின் தீவிரப் போராட்டத்திற்குப் பின்னர் செல்வாவின் நின்றுவிட்ட இதயம் மீண்டும் இயங்கத் தொடங்கியது.

டாக்டர்களிடையே வெற்றிப் பெருமிதம்

அங்கு நின்ற ஆஸ்பத்திரி ஊழியர்கள், செல்வாவின உறவினர்கள், தலைவர்கள், பிரமுகர்களின் முகங்களில் மகிழ்ச்சி ரேகைகள்.

ஆனல்-

அந்த நிலை நீடிக்கவில்லை—

சுமார் 20 நிமிடங்கள் இயங்கிய அவரின் இருதயம் மறுபடியும் நின்றுவிட்டது.

இரண்டாவது தடவையாக நின்றுவிட்ட தந்தையின் இருதயத்தை இயங்க வைக்க டாக்டர்கள் மீண்டும் களத்

**[தந்தை செல்வாவை தமிழ் மக்களுக்கு எப்படியும் காப்பாற்றிக் கொடுத்துவிட வேண்டும் என டாக்டர்கள் பகிரதப்பிரயத்தனங்கள் புரிந்தனர். ஆனல்...!]**

தில் குதித்தனர்.

இது தமது திறமைக்கு விடுக்கப்பட்ட சவாலாகக் கருதிய டாக்டர்கள் மேலும் தீவிரமாக இயங்கினர்.

இம்முறையும் வெற்றி டாக்டர்களுக்கே.

செல்வாவின் இருதயம் முன்னர் போல் இயங்ககிறது.

நேரம் நகர்ந்து கொண்டே செல்கிறது.

20 நிமிடங்கள்-

ஆம் இம்முறையும் அவரின் இருதயம் 20 நிமிடங்களுக்கு மட்டுமே இயங்கியது.

மீண்டும் டாக்டர்களுக்குச் சவால்

டாக்டர்களின் பணிகள் முன்னரைவிட பன்மடங்கு தீவிரமாகிறது.

பல்வேறு விசேட சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. பலவித முறைகள் கையாளப்படுகின்றன.

சகல அத்தியாவசிய சிகிச்சை முறைகளும் பயனற்றுப் போகின்றன

மின் அதிர்வு (Di-Fibrilation) சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

டாக்டர்களின் முகங்களில் சோகத்தின் சாயல்,

இம்முறை இயற்கைவென்று விட்டது.

மூன்று தடவை இயங்க மறுத்த அந்த மகானின் இருதயம் மூன்ருவது தடவையுடன் ஒரேயடியாகவே நின்று விட்டது.

யாழ். பெரியாஸ்பத்திரி 16ம் இலக்க வார்ட்டில் தமிழர் கூட்டணித் தலைவர்களும் உறவினர்களும், ஊழியர்களும் நோயாளர்களும் கண்ணீர்விட்டுக் கதற பெரியவரின் உயிர் பிரிந்துவிட்டது.

இரவு சுமார் 9-30 மணிக்கு அமரரின் உயிர் பிரிந்துவிட்டதாக டாக்டர்கள் தீர்மானித்தனர்.

ஃ ஃ ஃ

பிரபல மூளைநரம்பு சத்திர சிகிச்சை நிபுணரும் செல்வா மரணமடைந்த அன்று அவருக்குச் சிகிச்சை அளித்தவர்களில் ஒருவருமான டாக்டர் சுப்பிரமணியத்தை கடந்த வாரம் சந்தித்தபோது மேற்கண்ட தகவல்களை அறிய முடிந்தது.

முன்னர் யாழ். ஆஸ்பத்திரியில் பணிபுரிந்துவிட்டு பதவி உயர்வு பெற்று கண்டி ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்கு கடமையாற்றிவரும் டாக்டர் சுப்பிரமணியம் மாதத்தில் இருமுறை யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்து மூளைநரம்பு நோயாளர்களுக்குச் சிகிச்சை அளித்து வருகிறார்.

செல்வா மறைந்த அன்று மாலை 3 மணிமுதல் இரவு 1 மணிவரை யாழ் ஆஸ்பத்திரியில் நின்ற டாக்டர் சுப்பிரமணியம் மறுநாளே கண்டிக்குத் திரும்பிவிட்டார்.

மீண்டும் இரு வாரங்கள் கழித்து ஆஸ்பத்திரிக்கு வந்தபோது அமரர் செல்வாவின் நினைவு தம்மை ஆட்

### 'கண்டோஸ்'

கொண்டுவிட்டது என்று டாக்டர் கூறியபோது முகத்தில் தோன்றிய சோகத்தை அவரால் மறைக்கமுடியவில்லை.

யாழ். ஆஸ்பத்திரியில் செல்வா அனுமதிக்கப்பட்டிருந்த நாட்களில் யாழ்ப்பாணம் வரும் வேளைகளிலும் மூளைநரம்பு வைத்திய சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் கப்ராலுடன் இணைந்தும் டாக்டர் சுப்பிரமணியம் செல்வாவுக்குச் சிகிச்சை அளித்திருக்கிறார்.

கடந்த வருட இறுதியில் கண்டியில் நடைபெற்ற நடன அரங்கேற்றம் ஒன்றில் செல்வா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டபோதே தாம் அவரைக் கடைசியாகச் சந்தித்ததாகவும் அந்த நிகழ்ச்சி இன்றும் தமது நெஞ்சில் நிழலாடிக்கொண்டிருப்பதாகவும் டாக்டர் என்னிடம் கூறினர்.

செல்வாவின் ஞாபகசக்தியின் ஆற்றலை வியந்த டாக்டர் சுப்பிரமணியம் பின்வருமாறு கூறுகிறார்.

1952-ம் ஆண்டு செல்வாவை எனக்கு நேரில் தெரியாது; ஆனல் அவரின் ஆற்றலை பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

அப்போது தேர்தல்காலம் தமிழரசுக்கட்சி சார்பில் திரு. செல்வநாயகம் காங்கேசன்துறையில் போட்டியிட்டவேளை.

வட்டுக்கோட்டைத்தொகுதியில் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிட்ட திரு. அ. அமிர்தலிங்கத்தின் வேண்டுகோளின்படி செல்வாவைப் பற்றி ஒரு சிறு கவிதை எழுதிக் கொடுத்திருந்தேன்.

அக் கவிதை விடயம் அன்றுடன் முடிந்துவிட்டதாகவே நான் எண்ணியிருந்தேன்.

ஆனல்—

22 ஆண்டுகளின் பின்னரும் செல்வாவின் உள்ளத்தில் என்னைப் பற்றியும் எனது கவிதையைப் பற்றியும் இருந்த நினைவுகள் அகன்றுவிடவில்லை என்பதை கடந்த 74-ம் ஆண்டு ஜனவரியில் அறியும் வாய்ப்பு எனுக்கு கிட்டியது.

74-ம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்சி ஒன்றின் போது, நாம் இருவரும் சந்தித்தவேளையில் என்னைப் பாராட்டியதுடன் 52ல் நான அவரைப் பற்றி எழுதிய கவிதையை மீண்டும் ஒருமுறை என்னைக்கொண்டு எழுதுவித்து வாங்கிச் சென்ருர்.

செல்வாவின் ஞாபகசக்தி ஆற்றலுக்கு இதைவிட வேறு என்ன சான்றுவேண்டும்?

---

# இன்பியல் இசையைவிட துன்பியல் இசை கவர்வது ஏன்?

துன்பமான விடயங்களையும் சம்பவங்களையும் எமக்கு எடுத்துரைக்கின்ற பாடல்கள் தான் இன்பமான சங்கீதமாக எமக்கு அமைகின்றன. (Sweetest songs are those that tell us of sadest thoughts) என்னும்ஆங்கிலக் கவி அடிகள் மிகவும் உண்மையானதொன்றே.

துன்பியல் இசைமட்டுமன்றி துன்பியற் கதைகளும், துன்பியல் நாடகங்களும் துன்பியற் கவிதைகளும் கவரும் அளவிற்கு இன்பியல் கதை கவிதைகளோ இசை நாடகங்களோ கவர்வது இல்லை.

மனிதனுடைய வாழ்வின் பெரும் பகுதி துன்பம்நிறைந்த தொன்ருகவே தோன்றுகின்றது, துன்பத்தின் எல்லைகள் மனிதனுக்கு மனிதன் பொருளாதார நிலைமைக்கு ஏற்பவும் வாழும் சூழலுக்கு ஏற்பவும் வேறுபடுமே தவிர, ஒவ்வொருவனுடைய வாழ்க்கையும் அவ்வவனுடைய நிலையிலும் கூட இன்பத்தைவிடத் துன்பம் நிறைந்த தொன்ருக இருப்பதையே காண்கின்ருன்.

இத்தகைய துன்பமான வேளைகளில் தனது கவலைகளை மற்றவர்களுக்குச் சொல்வதன் மூலமும் சொல்லி அழுவதன் மூலமும் தனது துன்பச் சுமையைக் குறைக்க முயக்கின்ருன். மரணச்சடங்குகளில் ஒப்பாரி சொல்லி அழுவதன் நோக்கமும் இதுவே. மனிதரோடு பகிர்ந்துகொள்ள முடியாத அளவிற்கு எல்லை மீறிய அளவு துன்ப உணர்வுகளால் உள்ளம் உடைந்த வேளையில் எல்லையற்ற பரம்பொருளை நாடி அழுது அழுது முறையிட்டு ஒரு சிறிதளவு நேரமா இதும் தற்காலிக ஆறுதல் அடைய முயல்கின்ருன்.

எமது மெல் உணர்வுகளைத் தட்டி எழுப்பும் ஆற்றல் மற்றெல்லா நுண்கலைகளையும் விட இசைக்கு மிகுதியாக உண்டு. துன்பியல் உணர்வுகளால் சூழப்பட்ட மனிதன் எல்லா நேரங்களிலும் அதனல் தாக்கமடைந்தவன் போல் காணப்படாவிட்டாலும் கூட, சில வேளைகளில் வெளிச்சூழலினல் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தவன் போல் காணப்படினும் கூட, அவனுடைய அடிமனதிலே, ஆழ்ந்த உள்ளத்திலே துன்ப உணர்வுகள் ஆழமாகப் பதிந்து மாருதவடுவாக நிலைத்து நிற்கின்றன. மெல்லுணர்வுகளைத் தூண்டும் ஆற்றல் மிக்க இசையைக் கேட்கும் போது அதிலும் துன்பியல் இசையைக் கேட்கும் போது அவன் அதனல் பாதிக்கப்படாமல் இருக்கமுடியாது. சொற்ப வேளைக்காவது அச் சுமையிலிருந்து தற்காலிகமாக விடுபட்டிருப்பது போன்ற ஓர் உணர்வு ஏற்படுகிறது. ஒவ்வொரு மனிதனும் தன்னை மற்றவனேடு ஒப்பிட்டுப் பார்க்கும் போதுதான் தன்னுடைய நிலையை இட்டுக் கவலையும் திருப்தியும் அடைகிருன். தன்னைவிட ஒருவன் துன்பப்படுகிருன் என்கின்றபோது அவனுடைய துன்பங்கள் எல்லாம் மறைந்துதான் இன்பமான வாழ்க்கை நடாத்துவதாக ஒரு திருப்தி ஏற்படுகிறது. இவ்வாருன ஒரு மனநிலையை ஒரு துன்பமான இசையைக் கேட்கும் மாத்திரத்தில் அவன் பெறுவதற்குத் தவறுவதில்லை.

**மாலினி சிறீக்கந்தராசா B. A.**

இத்தகைய ஆறுதல்தரக் கூடிய ஒன்றுமக்களிடையேபிரபல்யமடைவதிலும், மக்களைக் கவர்வதிலும் வியப்பு ஒன்றும் இல்லை. இசையில் மட்டுமல்ல இலக்கியத்திலும் அவ்வாறே. ஐந்திணைகள் ஆகிய மருதம், முல்லை, குறிஞ்சி, நெய்தல், பாலை என்பவற்றுள் பாலைத் திணைக்கு, இலக்கியத்திற்கு மிக முக்கிய இடம் உண்டு. பாலைத்திணையில் பாடப்பட்ட இலக்கியப் பாடல்களின் உரிப்பொருள் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலைத்திணை இலக்கியப்பாடல் மற்றவற்றைவிடச் சிறப்பிடம் வகிப்பதற்கு அதன் உரிப்பொருளே காரணியாக இருக்கிறது. பாடல்களை மட்டுமல்ல பாடிய புலவர்கள் கூடமிகச்சிறந்தபுலவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்கள் மட்டுமல்ல, துன்பியல் இசையை இசைக்க வல்ல இசை வல்லுநர் (இசை வல்லார்) சிலர் பிரபல்யம் அடைவதற்குக் காரணமும் இதுவாகத்தான் இருத்தல் வேண்டும். இதற்குச்சான்ருகத் தெலுங்குப் பாடகர் கண்டசாலாவும் வடஇந்தியப் பாடகர் சைகாலும் அமைகின்றனர்.

எமது கர்நாடக இசையில் இரச உணர்வுகளுக்கு (Rasa) மிக முக்கிய இடம் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொருரச உணர்வையும்வெளிப்படுத்தும் இயல்பு ஒவ்வொரு ராகத்திற்கும் உண்டு. சிருங்கார ரசத்தினை கமாஸ் ராகம் மூலமும் வீர ரசத்தினை அடாணராகம் மூலமும், சோக ரசத்தினை முகாரி மூலமும் வெளிப்படுத்த முடியும். அந்த அந்த ராகத்திற்கு உரிய ஸ்வர சேர்க்கைகள் அந்த அந்த உணர்வுகளை, ரசங்களை வெளிப்படுத்தியுள்ளன. உதாரணமாக கமாஸ் ராகத்தில் அமைந்த 'புஜே சேவா' என்னும் பாடலை எடுத்துக்கொண்டால் அதன் சிட்டை ஸ்வரத்தில் வரும், 'நிஸ்நிநிததபம பாதமா-காமா பாதாநி, ஸஸரிநீ-நிநிஸதா-ததநிபாத' போன்ற ஸ்வரக் கோர்வைகள் இன்பச் சுவையை(சிருங்கார ரசத்தை) வெளிப்படுத்துவதை உணர முடிகிறது. இதே ஸ்வரக் கோர்வையை தோடி இராகத்தில் பாடுவதன் மூலம் துன்பச் சுவையை வெளிப்படுத்த முடியுமே அன்றி கமாஸில் வெளிப்படுத்திய இன்பச் சுவையை வெளிப்படுத்த முடியாது. அதிலும் தீவிர ஸ்வரங்களால் ஆன ஸ்வரக் கோவைகளைவிட கோமள ஸ்வரங்களால் ஆன ஸ்வரக்கோவைகளோ, கோமள தீவிர ஸ்வரங்களால் ஆன ஸ்வரக் கோவைகளோ கூடுதலாகத் துன்பச் சுவையை உணர்த்துவனவாக இருப்பதைக்காணலாம்.

துன்பியல் இசை மக்களைக் கவரும் அளவிற்கு துன்பியல் கதைகளோ துன்பியல் நாடகங்களோ துன்பியல் கவிதைகளோ மக்களைக் கவருவது இல்லை. காரணம்திரு. ஆனந்த

(9ம் பக்கம் பார்க்க)

# வாழை செய்கைபண்ணுவோம்!



வாழை செய்கை பண்ணுவோர் நீர்வேலி, உரும்பராய், அச்செழு, ஆவரங்கால், விளான் பகுதிகளில் அதிக ஊதியத்தைப் பெறுகிறார்கள்.

இந்தப் பயிரினம் மனிதனது உடல்நலத்துக்கு உதவக்கூடிய பழங்களையும், கறிக்குதவும் காய்கறிகளையும் தருகின்றது. இன்று திருமணங்கள், வேறு வைபவங்கள், கோயில் விழாக்கள் போன்றவற்றில் வாழைப்பழத்துக்கு பிரதான இடம் உண்டு.

யாழ்ப்பாண மாம்பழத்தைப் போல வாழைப்பழமும், தென் இலங்கையில் அதிகம் விரும்பி வரவேற்கப்படுகின்றது.

வாழையிலை திருமண வைபவங்களிலும் அமரக் கிரிகைகளிலும் போசன பாத்திரங்களாக சிறப்பிக்க உதவுகிறது. மேலைத்தேசங்களில் வாழையிலை வாழைத்தண்டுகள் கால்நடைத் தீனக உபயோகிக்கப் படுகின்றன.

## வாழைச்செய்கைக்கு உகந்த மண்வகைகள்

இந்தப் பயிரினம் மணலும் களியும் சேர்ந்த இருவாட்டித் தரையில் செழிப்பாக வளரும். மிதமிஞ்சி நீர் தேங்கி நிற்கும் தரைகளில் உண்டுபண்ணினுல் அதிகப் பலனைக் கொடுக்காது. இந்தப் பயிர் நீர்மட்டத்தில் இருந்து அதிக ஆழம் இல்லாத இடங்களில் நன்றாகச் செழித்து வளர்கின்றது. நீர்மட்டம் ஆழமான இடங்களில் வாழை செழிப்பற்று வரும்.

## இனங்கள்!

### பழவர்க்க இனங்கள்

கதலி, கப்பல், இதரை, ஆனைவாழை, மருத்துவவாழை பண்டி வாழை, சிங்கப்பூர் கதலி வாழை பழவர்க்கத்துக்குரிய வகைககளில் கப்பல் வாழையும் இதரை வாழையுமே சிறந்தவை என எல்லோராலும் கருதப்படுகிறது.

### (2) கறிவாழை இனங்கள்

கிளிமொந்தன், சாம்பல் மொந்தன்.

எல்லா இன வாழைகளிலும் கதலி வாழையே அதிக வருமானத்தைக் கொடுக்கக்கூடியது. கதலி வாழை இனம் வருஷம் ஒன்றுக்கு ஒரேஅடியில் இருந்து சராசரியாக இரண்டு குலைகள் போடும். இந்த இனப் பழத்தை தென் இலங்கை மக்கள் அதிகம் விரும்புவார்கள். இந்த இனத்திற்கு சந்தைவாய்ப்பு அதிகம் உண்டு. இந்த இனத்துக்கு உருக்கன் நோய் சகிக்கும் தன்மையும் மற்ற இனங்களிலும் பார்க்க கூடியளவு உண்டு.

கதலி வாழை பொத்திவந்து 75—90 நாட்களில் முற்றிப்

**மு. நடராசா**

பருவம் அடைகிறது. மற்றும் ஏனைய வாழைகள் இவற்றிலும் பார்க்க காலம்கூடவே பிடிக்கிறது. இக் காரணங்களை முன்னிட்டே நீர்வேலி, ஆவரங்கால், அச்செழு உரும்பராய் போன்ற இடங்களில் கதலி இனத்தைக் கூடுதலாக உண்டுபண்ணுகிறார்கள்.

வாழைக்குலை கிராக்கியான காலங்களில் பருவப்படாத குலைகளை வெட்டிக்கொண்டு போய் சந்தையில் விற்றுவிடுகிறார்கள். இதனுல் இவர்களின் வாழைப்பழைத்தின் கிராக்கி குறைந்துவரும்.

## நடுகைத் தூரம்

செழிப்பான நிலங்கள் 12 அடி, 12 அடி.

செழிப்பற்ற நிலங்கள் 10 அடி + 10 அடி.

சந்தையில் மானமுள்ள குலைகள் பெற ஒரு அடியில் 2 குட்டிகள்தான் விட வேணும்.

## பசளை இடல்

வாழை அதிகம் பலனைத் தரவேண்டுமாஞல் எரு, ஓலை, குழை, சணல் முதலியன புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் குழிகள் வெட்டி வாழை அடியில் இருந்து 3 அடி தூரத்தில் நாட்டவேண்டும். மார்கழி தை மாதங்களில் கொத்திவிடவேண்டும். கொத்தியவுடன் பாத்தி கட்ட வேண்டும். மார்கழி, தை மாதங்களில் கொத்திவிட வேண்டும். கொத்தியவுடன் பாத்திகட்டவேண்டும். வருடம் ஒருமுறை ஆடுமாடு கட்ட வேண்டும்.

## செயற்கைப் பசளை இடல்

பின்வரும் விதம் செயற்கைப் பசளையைக் கலந்து (1) நவச்சார கெந்தகை சல்பேற் அமோனியா 3 பங்கு, (2) சுப்பர் பொஸ்பேற் (அதி எரிகை) 1 பங்கு, (3) மியூறியேற் ஒவ் பொற்ருஸ் 1 1/2 பங்கு.

ஒவ்வொரு அடிக்கும் நாட்டி 6 மாசத்துக்குப் பின் 1/2 றுத்தல் வீதம் போடவும்.

பயிர் வருஷா வீதம் கணக்கின்படி பசளை போடவும், நாட்டி ஒரு வருஷம் சென்ற பின் 1 றுத்தல்; இரண்டு வருஷம் சென்றபின் 2 றுத்தல், மூன்றும் வருஷத்துக்கு பின் அடிக்கு 8 றுத்தல்,

மேற்கூறிய கலவை வருஷா வருஷம் ஐப்பசி மாதத்தில் பாவித்தால் அதிக பலனைப் பெறலாம்.

## உருக்கன் நோய்

உருக்கன் நோயுள்ள வாழைகளைக் கிழங்கும் இல்லாமல் பெயர்த்தெடுத்து எரித்துவிட வேண்டும். அந்த நிலைகளில் சுண்ணம்பு இட்டு 3 மாசங்களுக்கு ஆறவிடவும். அதற்குப் பின்தான் புதிய குட்டிகளை நாட்டவேணும்.

## பிரதானமானது

முதல் தடவை வாழைக் குட்டிகள் பெறும்பொழுது உருக்கன் நோய் இல்லாத நன்றாய் அறிந்த வாழைத் தோட்டங்களில் இருந்துதான் குட்டிகள் பெறவேண்டும்.

---

# பசியாற — உண்ணுங்கள்..!

**டாக்டர் ச. ராஜரத்தினம்**

(முன் தொடர்ச்சி)

விழுங்கப்படும் உணவு வளர்ந்தவர்களில் முப்பது அடி போல் நீளமுள்ள உணவுக் கால்வாயின் முதல் படியை அடைகின்றது தொண்டையைத் தொடர்ந்து குழாய் போல் அமைந்திருக்கும் இந்தப் பகுதி (oesophaqus) மென்மையானது. சிதம் செறிந்து ஈந்துகொடுக்கும் தன்மையது. இதன் ஊடாக இரை இரைப்பையை அடைகிறது. அங்கேயும் சீரணத்துக்குரிய திரவங்களைச் சொரியும் சுரப்பிகள் பரவிக்கிடக்கின்றன. அவை உணவின் மேல் திரவத்தைச் சொரிந்துகொண்டேயிருக்கும். (GASTRIC FLUID) இந்தத் திரவம் பெப்சின், றெனின், ஹைட்ரோக்குளோறிக் அமிலம் என்பனவையைக்கொண்டதாயிருக்கும். (Pepsin, Renin Hydrochloric acid) 24 மணித்தியாலங்களில் பத்துப் போத்தல் கொள்ளக்கூடிய திரவம் இங்குசேரும். இந்தத் திரவம் திரும்ப சிறுகுடலில் பெரும் பகுதி உறுஞ்சப்பட்டு உடம்புடன் சேர்க்கப்படும்.

இறைச்சி, மீன், முட்டை, பருப்புப் போன்ற கடின பொருட்களை இந்நீர் உருக்கிப் பதமாக்கி உடம்புக்குப் பயன் படுத்தும். இதிலிருக்கும ஹைட்ரோக் குளோறிக் அமிலமே உணவை உருக்க உதவுகின்றது. இந்த அமிலம் ஒரு சிறு பங்காயினும், அது போதியதில்லாவிடின் சீரணக் குறைவு ஏற்படுகின்றது. சீரணம் தாமதமாகின்றது. அதுகூடிஞல் வயிறெரியும், நெஞ்செரியும். நாளடைவில் வயிறு புண்படவும் கூடும். காரப் பொருட்களை மிதமிஞ்சி விரும்பிஉண்பவர்களும், பாக்குவெற்றிலை சப்பிவிழுங்குபவர்களும், குடிப்பழக்கம் உள்ளவர்களும், புகைப்பவர்களும் இதே நிலையைத்தான். எதிர் நோக்குவர். வாழ்நாள் முழுதும் மருந்தும்கையுமாய் வருந்துகிறார்கள். புண்கள் மாத்திரமன்றி புற்றுநோயுமே உணவு வாய்க்காலின் எப்பகுதியிலும் ஏற்படலாம்.

## பசியாற உண்ணுதல்

வயிறு புடைக்கச் சாப்பிடுதல் மற்றோர் தீங்குவிளைக்கும் பழக்கம். இரைப்பை நிறையவே அது அங்கிங்கு அசைய முடியாது திண்டாடுகிறது. ஆடி, அசைந்து, உணவைப் பிரட்டி உருட்டி, சீரண நீருடன் சேர்த்து உணவைத் திரவமாக்கும் வேலை முடியாமற் போகிறது. அப்பொழுதே மூச்சுவிட இயலாது கஷ்டப் படப்படுகிறார்கள். குற்றும், நோவும் அதைத்தொடர்கின்றன. சிறிது சிறிதாய் உணவு குடலைநோக்கித் தள்ளப்பட முட்டும் நோவும் சிறிது சிறிதாய்க் குறையும். இது முடியாத பொழுதுதான் வயிறு உணவை ஏற்க மறுக்கிறது. வந்தவழியே திருப்பி அனுப்பி விடும். பிரட்டு, உவாந்தி. உவாந்தியை உண்டாக்கும் வருத்தங்களும் உண்டுதான் ஆனல் அவையும் எங்கள் உணவுப் பிழைகளால் ஏற்படுகின்றவையே.

எனவே எவ்வுணவையும் பசியாற உண்பதல்லாது வயிறார உண்ணுதல் கூடாது. இன்னும் இடமிருக்கிறதென்று நாம் உணரும் பொழுதே இலையை விட்டெழும்பி விடுதல் வேண்டும். இலையில் சாப்பிடுவது ஓர் நல்லபழக்கம். ஒவ்வொரு முறைக்கும் புதியதோர் "கோப்பை"! சுத்தமும் சேருகிறது. "முக்கால் வயிறு" என்பர் மூதாதையர். முழுவதும் உண்மை. இது தெட்டத் தெளிவாகின்றதன்றோ? சீரணத்துக்கென்று மருந்தொன்று தேவை வராது. ஏப்பம் ஏற்படாது. உவாந்திக்கிடமில்லை உணவும் வீணுகாது உடம்பையே சேரும். மற்றது பசியின்றி உண்ணுதலாகாது, இறைப்பை காலியானல் மட்டுமே அந்தப்பத்தையும் மறக்கச் செய்யும் பசிநோ தோன்றும். "உணவு வேண்டும். ஏற்க நான் தயாராயிருக்கிறேன்" என்ற இரைப்பையின் அழைப்பிது! இதுவே மறுமுறை உண்ணும் நேரம். இந்த அழைப்புக்கு செவிசாய்த்தலல்லாது மனைவி மக்களின் உணவாக்க முடிவில் ஏற்படும் அழைப்புக்கு இடம் கொடுக்கக் கூடாது. "அது ஒன்றும் செய்யாது' கொஞ்சமாய் உண்ணுங்களேன்" என்பது புத்தியற்ற யோசனை இதைச் சாட்டாய் கொண்டு மனுஷன் எழும்பி விடுவான் வேண்டாதவொன்றைத் திணிக்க! தேனைக்கூட்டிப் பாலுடன் வைத்தாலும் நாய்தானும் பசியில்லாத போது நக்கியும் பாராது! ஆனல் மனுஷனே!

## இரவில் இடை போசனம்

தடுக்குப் பருவத்தில் 3–4 மணித்தியாலங்களுக்கொரு முறை இந்த அழைப்பு வரும். காலங்கழிய வயதேற இந்த இடைக்காலம் கூடிக் கொண்டே போகும். உணவும் போசாக்கு கூடியதாய் இருப்பதுடன் சீரணத்துக்கு நேரம் எடுப்பதாயுமிருக்கும்.

அவயங்கள் எல்லாம் சிறிது ஆறுதல் எடுக்கும்நேரம் இரவு எனவே இரவில் இடைப் போசனம் இன்னல் விளைவிக்கும். பச்சிளம் குழந்தைக்கு இரவு பத்து மணிபோல் பாலுணவு கொடுக்கலாம். பின்பு காலை 4 மணிபோல் பாற் தேவை ஏற்படும். வளர்ந்தோருக்கு விதித்திருக்கும் பதினறு மணித்தியாலங்களுக்கும் போசாக்கான மூன்றுவேளை உணவு போதுமானவை.

உடம்பைப் பிழிந்து உழைக்கும் பாட்டாளிகளுக்கு இடை உணவு சிறிது தேவையே. இரண்டு வேளை போதுமான உணவுபெறவே திண்டாடும் இந்த அப்பாவி நண்பருக்கு இடைநேரம் உணவு பற்றி யோசிப்பது அர்த்தமற்ற வேலை.

இடைநேரத்தில் தேநீரோ கள்ளோ குடிக்கிறார்கள். இவர்களுக்கு எந்த நேரமும் தேநீர் நேரம். அதுபோல் 'கள்'நேரம் (பழம்தண்ணீர்) சோற்றில் ஊற்றிய நீரைமாத்திரம் குடிப்பார்களாயின் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும். மோர். கஞ்சி இவையும் களைபோக்குவதாயும் போசாக்கு கொடுப்பதாயும் அமையும்.

கள்ளில் சீவசத்து இருக்கிறதென்று பந்தயம் பிடிக்கும் மேல்வகுப்பினரையும் படித்தவர்களையும் எனக்குத் தெரியும். காகம் கழிவைக் கிளறிய பின் 'கள்ளில்' நாகம் தணிக்கிறதென்பதை இவர்கள் உணர்வதில்லை. "ஒமேபியாசிஸ்" என்ற நோய் இந்தப் பாணத்தின்மூலம் பெருமளவில் பரவுகின்றதென்பதை இவர்களறியார். வயிற்ரோட்டம், வயிற்றுப்புண் காரணமாக வயிற்றுநோ இந்நோயின் அறிகுறிகளாகும். இலகுவில் தீர்க்கவும் முடியாதது. ஈரலும் பாதிக்கப்படுகின்றது.

குதிரையில், காரில் காலம் கழிப்பவர்களுக்கு உணவின் தேவை மிகக்குறைவு. இத்தகையவர்களுக்கு இது வோர் நல்ல உபதேசம் ஆனல் நடப்பது வேறு. தேவைக்கு மிஞ்சிய ஊணை உண்டு உடலை மலையாய்வளர்த்து இருதய நோய்களும், நீரழிவுக்குமாளாகிறார்கள். பாவம்.

( வளரும் )

---

### தமிழ் வளர்த்த கிறிஸ்தவர்கள் -15

# பக்தியையூட்டிய நிந்தாஸ்துதிகள்

**வண. எம். ஏ. இரத்தினராஜா**

மனித இரட்சிப்புக்கு முக்கிய, தேவை பாவ உணர்ச்சியே. என்று மனிதன் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு தன் பாவத்துக்காகப் புலம்பி மன்றாடுகிறானே அன்றுதான் அவனுக்கு மீட்சி. இது ஓர் அடிப்படைக் கிறிஸ்தவ சத்தியம். இவ்வுண்மையை வேதநாயக சாஸ்திரியார், அநேக பாடல்களுக்கூடாக வெளிப்படுத்தினர்,

"ஐயயா நான் பாவி-என்னை
ஆளுந்தயாபரனே,
எத்தனை சூதுகள்
எத்தனைவாதுகள்
எத்தனை தீதுகளோ - என
தந்தானே! என்பிழை
அத்தனையும் பொறுத்
தாண்டருளுங் கோவே.
பொய்யும் புரட்டும்
உருட்டும் திருட்டும்
பொறுமையும் ஆணவமும்
விட்டுய்யும்படி அருள்
செய்வாய் அனுதி ஓர்
ஏக திரித்துவனே"

என்ற பாடல்கள் பிழைநினைந்திரங்கலை அழகாகக் காட்டுவனவாம்.

ஆண்டவனே! நான் உன் பிள்ளை, நான் தீயவனுயினும் என்னை மன்னித்து ஏற்றுக் கொள்க. கள்ளனுயினும் வெள்ளனுயினும் நான் உன்னை நம்பி வருகிறேன் என்னை ஏற்றுக் கொள் என்று வேதநாயக சாஸ்திரியார் இரந்து பாடும் பாடல்கள் மிகப்பக்தி விநயமானவை. ஆரும்துணை இல்லையே எனக்

காதியாந் திருப்பாலா
-உந்தன்
ஐந்து காயத்தினடைக்கலம்
கொடுத்தாளுவாய்
யேசுநாதா.
கள்ளனுயினும்
வெள்ளனுயினும்
பிள்ளை நானுனக் கல்லவோ
கர்த்தனே வலப்பக்கம் மேவிய
கள்ளனுக்கருள் செய்தையே
தள்ளிஎன்னை விடாமல்உன்னடி
தந்து காத்தருள் அப்பனே
தயவதாய் ஒரு குருசிலேறிய
சர்வ ஜீவ தயாபரா"

வாழ்க்கையில் இறைவணக்கம் இல்லாவிடில் அந்த ஜென்மம் எதற்கு? மனுஷப்பிறவியின் நோக்கமே தன் கடவுளை அறிந்து நேசித்து சேவித்தல் என்ற உண்மையை "ஜென்மம் ஏதுக்கு - ஜெபம் செய்யா ஜென்மம் ஏதுக்கு" என்றும் உலகிலே பாவி ஒருவனை நேசிப்பவரும் உண்டோ என்ற கேள்விக்கு, கிறிஸ்துநாதரே பாவியை நேசிப்பவர் என்றும்

(9-ம் பக்கம் பார்க்க)

### இப்படித்தான் இந்தியா சென்றேன்

# தமிழ்நாடு கோயில்களில் வழிகாட்டிகள்செய்யும் தகிடுதத்தம்!

எஸ். கே. காசி

'தேவஸ்தான வழிகாட்டியின் உதவியுடன் மலைமேல் உள்ள கோவிலை நோக்கி நடந்தோம். பழனி மலையின் உச்சியில் அமைந்துள்ள ஆலயத்திற்குச் செல்ல 697 படிகளைக் கடக்கவேண்டும். 99 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்டது இந்த மலை என்று சொன்னார்கள்.

சிரமமின்றி ஸ்ரீ முருகனைக் கண்டு தரிசிப்பதற்காக ஆலயச் சொந்தப் பொறுப்பில் ரயில் சேவை ஒன்றும் மலை உச்சிக்கு நடைபெற்றுவருகின்றது. ஜப்பான் தொழில் நிபுணர்களின் உதவியுடன் மூன்று லட்சம் ரூபா செலவுடன் இந்த ரயில் சேவை அமைக்கப்பட்டதாம்.

இந்த 'மின் இழுவை ரயில்' 60 குதிரைச் சக்தி வேகம் கொண்டது. ஒரே சமயத்தில் 32 பேர் உட்கார்ந்து செல்ல வசதி செய்யப்பட்டுள்ளது. மலை உச்சியைச் சென்றடைய 8 நிமிட நேரம் ஆகிறது.

நாம் இந்த ரயில் மூலம் ஆலயம் செல்லவில்லை. படிக்கட்டுகளில் நடந்துசென்றோம். மலை அடிவாரத்திலிருந்து செங்குத்தாக மலை உச்சியை நோக்கி வருவதைப் பார்ப்பதோ பயங்கரம்! மலை உச்சியில் இதற்கென அமைக்கப்பட்டுள்ள ஒரு இயந்திர அறையும் இந்த ரயிலும் ஒரு சங்கிலியால் இணைக்கப்பட்டுள்ளது. இந்தச் சங்கிலி மூலம் மலை உச்சிக்கு மின் இழுவை ரயில் செல்கிறது.

மலை உச்சியை நடந்து சென்றடைந்தபோது மிகவும் களைப்பாக இருந்தது. எனினும் பழனி ஆண்டவனைத் தரிசிக்கக்கூடிய பாக்கியம் இவற்றையெல்லாம் மறக்கச் செய்தது.

தேவஸ்தான வழிகாட்டியாக எமக்கு அறிமுகஞ்செய்யப்பட்டவர் எம்மை ஆலயத்துக்குள் அழைத்துச் சென்றார். உள்ளே செய்ய ஒரு ரூபாய் கொடுத்துப் பிரவேசச் சீட்டு எடுக்கவேண்டும். உங்கள் நாமம் சொல்லி அர்ச்சனை செய்ய விரும்புகிறீர்களா? என்று கேட்டார் வழிகாட்டி. இரண்டு அர்ச்சனைக்கு 2 ரூபா 50 காசு என்றும் சொன்னார். நாமும், திருமதி ஆறுமுகராசாவும் 5 ரூபாவைக் கொடுத்து நாம அர்ச்சனைச் சீட்டு எடுக்கும்படி சொன்னோம். சில நிமிட நேரத்தில் திரும்பிவந்த 'வழிகாட்டி' எம்மை நுழைவாயிலில் கியூவில் அமரச்செய்தார். ஆலயத்தின் உள்ளேயும் மேலும் மூன்று ரூபா, செலவாகுமென்று கூறி, அத்தொகையைத் தரும்படி கேட்டார். 3 ரூபா எதற்குத் தேவையென்று கேட்டோம்.

மூலஸ்தான வாயில் காவலாளி, அர்ச்சனை செய்யும் பூசகர், பூசகருக்கு உதவி செய்யும் ஏவலாளர் ஆகியோருக்குப் பணம் கொடுக்காமல் தப்பி வரமுடியாது என்று அந்த வழிகாட்டி விளக்கம் தந்தார். இவர்கள் அனைவரும் தேவஸ்தான ஊழியர்களா? என்று கேட்டேன். 'ஆம்' என்றார்.

இங்கு தரிசனத்திற்கு வரும் அடியார்கள் எல்லோரும் பணம் கொடுப்பார்களா? என்று வழிகாட்டியிடம் கேட்டபோது எல்லாருமே கொடுக்கவேண்டும்; கொடுக்காதுவிட்டால் தீபாராதனையைக்கூட முறைப்படி பார்க்கவிடமாட்டார்கள் என்று சொன்னான் அந்த வழிகாட்டி.

தேவஸ்தானம் இவர்களுக்கு ஊதியம் கொடுப்பதில்லையா? என்று வினவினேன். ''அதெல்லாம் எப்படிப் போதும் சார்'' —இப்படி வருபவர்கள் கொடுப்பதை வைத்துக் கொண்டுதான் சீவிப்பாங்க'' என்று பதில் தந்தான்.

''இங்கு தினமும் ஆயிரம் பேர் ஆலய தரிசனத்துக்கு வருவார்களா? —நான் கேட்டேன்.

''ஆயிரமா சார்,-மூவாயிரம் பேர் வரை வருவாங்க'' என்றான் அவன்.

அப்படியானால் தினமும் ஒருவருக்கு மூவாயிரம் ரூபா கிடைக்கிறது என்றேன்.

''இல்லை சார் —எல்லோருமே கொடுப்பாங்களா? சும்மா இப்படித்தான்— என்று இழுத்தான் வழிகாட்டி...

இவர் எம்மிடம் சுரண்டத் தொடங்கியிருப்பதை உணர்ந்தேன். தேவஸ்தான சத்திரத்தில் அமைந்துள்ள கடையில் அபிஷேகப்பொருட்களை எமக்கு விற்கச் செய்வதில் கடை முதலாளியுடன் ஒத்துழைத்ததை நினைவுகூர்ந்துகொண்டு அந்த மூவரையும் நாம் 'சமாளிக்கிறோம்' என்றேன். நீங்க கொடுக்காதுவிட்டால்என்னில்கோபிப்பாங்க சார்... என்று தொடர்ந்தான் அவன்.

எம்மிடம் பணமில்லை அப்பா— இலங்கையிலிருந்து வந்துள்ளோம். எமது நாட்டு அரசாங்கம் பணத்தை இங்கு கொண்டுவர அனுமதிகப்பதில்லை —அமைதியாகக் கோயிலைத் தரிசிக்க விடமாட்டாயா என்று கோபத்துடன் கேட்டேன்.

எது எப்படியானாலும் உள்ளே மூன்று ரூபா கொடுப்பது இங்குள்ள வழமை —இதில் இருந்து தப்பவேமுடியாதென்று அணித்தரமாகச் சொன்னான் வழிகாட்டி.

10 நிமிட நேரம் வரை நுழை வாயில் கியூவில் அமர்ந்திருந்தோம். எமது முறை வந்தபோது வாயில் கதவு திறக்கப்பட்டது. 'அரோ ஹரா' சப்தத்துடன் சுமார் 25 பேர் உள்ளே நுழைந்தோம். பழனி ஆண்டவன் ஒரு முழத் துண்டுடன் அங்கே எழுந்தருளியிருக்கக் கண்டபோது எம்மை மறந்தநிலையில் ஆனந்தக் கூத்தாடினோம். பத்து ரூபாவுக்கு வாங்கிவந்த பாலைக் குடத்துடன் அபிஷேகத்துக்குக் கொடுத்தோம். அப்போது வழிகாட்டி, ''நாமத்தைக் கேளுங்கள்'' என்று அர்ச்சகரிடம் மெதுவாகக் கூறியது எனது காதில் பட்டது. இதனை அர்ச்சகர் கவனிக்கவில்லைப் போலும்! வெள்ளைத்துணியினால் மூடிக்கட்டியிருந்த பால் குடத்தை திறந்தார் அர்ச்சகர்! பழனி ஆண்டவனுக்கு அதனால் அபிஷேகம் செய்தார்.

என்னே ஏமாற்றம்! சுமார் 5 போத்தல் கொள்ளக்கூடிய அந்தப் பாற்குடத்திலிருந்த பால் தண்ணீருக்குச் சமனாகக் காட்சியளித்தது. சுமார் அரைப் போத்தல் பாலுக்குள் தண்ணீரைக் கலந்து பத்து ரூபாவுக்கு விற்பனைசெய்துள்ளார்கள்!

இதுவும் ஓர் அற்புதம்தான் என்று ஆண்டவனிடம் பழியைப் போட்டுவிட்டு வெளியே வரத் தயாரானோம். உள்ளே இருந்தவர்கள் வேறொரு வழியால் வெளியேறும்போது நுழைவாயில் கதவு திறக்கப்பட்டு அடியார்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டார்கள்.

இந்த இடைவெளி நேரத்துக்குள் அர்ச்சகர் எமது வழிகாட்டியின் உதவியுடன் எம்மிடம் பணத்துக்கு வந்தார், 3 ரூபா கொடுத்துவிட்டார்களா என்று கேட்டார் அந்த அர்ச்சகர்.

எதற்காக என்று விளக்கம் கேட்டபோது அர்ச்சகருக்கும் எனக்கும் மூலஸ்தானத்துக்குள்ளேயே வாக்குவாதம் நீடித்தது. வழிகாட்டிகளின் ஒத்துழைப்புடன் தேவஸ்தானத்தில் நடக்கும் தில்லுமுல்லுகளை யாரிடம் .சொல்வது என்று அறியாமல் திகைத்தோம்.

ஆண்டவனிடம் நம்பிக்கை வைத்து ஆத்மதிருப்திக்காக தரிசனத்துக்குவருபவர்களிடம் இவ்விதம் நடந்துகொள்வதற்கு தேவஸ்தானம் ஏன் அனுமதி வழங்குகிறதோ புரியவில்லை. இவ்விதமானவர்கள் மீது சந்நிதி முகாமைச்சபை தடைவிதிக்கமுடியாதா?

தொடர்ந்து வெளிவீதிக்குச் சென்றபோது வழிகாட்டிக்கும் எனக்கும் பிரச்னை நீடித்தது. தமது கூலி 3 ரூபா 50 சதத்தை தந்துவிடும்படி கேட்டார்.

ஆண்டவனிடம் நம்பிக்கை வைத்து ஆத்மதிருப்திக்காகத் தரிசனத்துக்கு வருபவர்களிடம் இவ்விதம் நடந்துகொள்வதற்கு தேவஸ்தானம் ஏன் அனுமதி வழங்குகிறதோ புரியவில்லை. இவ்விதமானவர்கள் மீது சந்நிதி முகாமைச்சபை தடைவிதிக்கமுடியாதா?

ஒருவிதமாக இவர்களின் கெடுபிடிகளிலிருந்து விடுபட்டு பழனி ஆண்டவன் மீது பழியைப்போட்டுவிட்டு தேவஸ்தான சந்திரத்துக்குத் திரும்பி ஆலயத்தில் எமக்கு நடந்த கௌரவங்களை எடுத்துக் கூறினோம்.

தேவஸ்தான வழிகாட்டியே பக்தர்களுடன் இப்படி நடந்துகொள்வது நியாயமாகுமா என்று வினவினேன். அப்போதுதான் உண்மை நிலை தெரிய வந்தது.

தேவஸ்தானத்தால் வழிகாட்டிகள் நியமிக்கப்பட்டிருப்பது உண்மைதான்; இவர்களுக்கென்று குறிப்பிட்ட தொகைப்பணம் (3 ரூபா) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சத்திரத்திற்கு வரும் யாத்திரிகர்களின் பெட்டி முடிச்சுகளை அறைக்குத் தூக்கிச்செல்வதற்கு அங்குவருபவர்கள் கூலியும் கொடுப்பார்கள்.

இவ்விதமான தேவஸ்தான 'வழிகாட்டிகள்' சத்திரத்தில் வருபவர்களை வெளியிலுள்ள பதிவுசெய்யப்படாத வழிகாட்டிகளுடன் சேர்த்துவிட்டு அவர்களிடம் ஒரு கமிஷனைப் பெற்றுக்கொண்டு சும்மா இருந்துவிடுகிறார்கள் – அவ்விதம் வரும் வழிகாட்டிகள் அடியார்களிடம் அசிங்கமாக நடந்து கடவுள் பக்தியையே குலைத்துவிடுகிறார்கள்-இது தான் அங்குள்ள நிலைமை.

நாம் அர்ச்சனைக்குக் கொடுத்த 5 ரூபாவும், கூலி 3 ரூபா 50 சதமாக மொத்தம் 8 ரூபா 50 காசு எம்மிடமிருந்து அந்த வழிகாட்டி உழைத்துவிட்டார். அதாவது தமிழ் நாட்டில் சாதாரணமாக ஒருவர் இத்தொகையுடன் மூன்று நாட்கள் சீவிக்கமுடியும். எது எப்படியானாலும் தேவஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள பழனி ஆண்டவனை நேரில் தரிசிக்கும் பாக்கியம் எமக்குக் கிடைத்தமை ஓர் அற்புதம் என்றுதான் சொல்லலாம்.

தங்கக்காவடி, சந்தனக் காவடி, தீர்த்தக்காவடி, இளநீர்க்காவடி, கற்பூரக்காவடி, சேவல்காவடி, பறவைக்காவடி, வெள்ளிக்காவடி, பன்னீர்க் காவடி, சர்ப்பக்காவடி, தேர்க் காவடி, பால்காவடி, அன்னக்காவடி, புஷ்பக்காவடி, போன்ற காவடிகளுடன் பக்திப்பரவசத்துடன் அங்கு திரளும் எத்தனையோ பக்தர்கள் ஆலய வளவில் 'குடித்தனம்' நடத்தும் போலிப் பூசகர்களிடம் சிக்கி, ஆலயக் கட்டிடத்தைமட்டுமே தரிசித்துவிட்டுத் திரும்பியவர்களை நான் கண்டேன்.


பழனியிலுள்ள சண்முகநதி, வரதமாநதி, வாய்க்கால்நதி, சரவணப்பொய்கை, இடும்பன்குளம், மூலைவாய்க்கால், வைகாபுரிக்கண்மாய், ஸ்ரீ பெரிய ஆவுடையார்கோவில், கிரிப்பிரகாரத்திலுள்ள பிரம தீர்த்தம் போன்ற ஒன்பது தீர்த்த ஸ்தலங்களில் நீராடிவிட்டு சுவாமி தரிசனம்செய்து அருட்பெரும் வரப்பிரசாதங்கள் பெற்றிட பழனிகோவிலுக்கு வந்த அடியார்கள் சிலரை ஆலய வீதியில் வழி மறித்து-அர்ச்சனை செய்ய உதவிசெய்து தருவதாகக்கூறி, அர்ச்சனைப் பொருட்களைப் பெற்றுச்சென்று இதற்குப் புறம்பான வீதி ஒன்றில் வைத்துத் தேங்காய் உடைத்து ஒரு சில வாழைப்பழங்களையும், அர்ச்சனைப் பொருட்களையும், அர்ச்சனைக்காசையும் தனது மடிக்குள் வைத்துவிட்டு, ஒரு சில பூக்களையும், விபூதி பிரசாதங்களையும் அர்ச்சனைப் பெட்டிக்குள் வைத்து திரும்பி வந்து அந்த அடியார்களிடம் கொடுத்து அனுப்பியதையும் நான் நேரில் கண்டேன்.

வெளிநாடுகளிலிருந்து செல்பவர்கள் மட்டுமல்ல இந்திய நாட்டின் பல்வேறு மூலைமுடுக்குகளிலிருந்தும் தினமும் திரளும் நூற்றுக்கணக்கான யாத்திரிகர்கள் இவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள முடியாத நிலை இங்கு இருந்துவருகிறது.

பழனிகோவிலிலுள்ள தங்க விமானம் இரண்டரை லட்சம் பெறுமதியுடையதாம். அத்துடன் 14,000 ரூபா பெறுமதியான வைரக்கற்கள் பதித்த அழகிய அற்புதக்கிரீடம் ஒன்றும், ஏராளமான தங்க வெள்ளிச்சாமான்களும் இங்கிருக்கின்றன.

இத்தேவஸ்தானத்துக்குச் சொந்தமாக நஞ்சையில் 354 ஏக்கர் நிலமும், புஞ்சையில் 426 ஏக்கர் நிலமும் உள்ளன. இவைகள் மூலம் வருடமொன்றுக்கு ஒரு லட்சம் ரூபா வருமானம் கிடைக்கிறதாம். மற்றும் கறவைப் பசுக்களைக் கொண்ட 'கோசாலா' என்று மேற்குக் கிரி வீதியில் கட்டப்

(9-ம் பக்கம் பார்க்க)



இவர் யார்? என்று கேட்டேன் ஓவியரை நம் நாட்டுச் சரக்குகளில் ஒன்றுதான் என அவர் விடை கொடுத்தார்.

கொஞ்சம் விளக்கமாகச் சொல்லமுடியுமா? என்றேன். போல, புரைய, ஒப்ப என்பன உவமை உருபுகளாயினும், தமிழர் அவற்றைக் கலை வடிவில் கண்டு மகிழ்கிறார்கள் அவர்களில் இவரும் ஒருவர் என்றார், ஒன்றுமே விளங்கிக் கொள்ள முடியவில்லை என்றேன் திரும்பவும்.

பார்வையில் ஆள்மாறாட்டம் ஏற்படுத்துவது போல கேள்வியிலும் உண்டு. அந்த வரிசையில் உள்ள ஒருவர்-தான் இவர் என்றார் ஓவியர். யாராக இருக்கலாம .என்று ஊகித்துக் கண்டுபிடிப்பதற்குள் நேரம் வீணாகச் சென்றுகொண்டேபோகும் என்று கூறியபடி, இலங்கை பாலமுரளிகிருஷ்ணாக்களில் 'இவரும் ஒருவர் என்றதும் உடனே தெரிந்து கொண்டேன். இசைக்கலைஞர் குலசீலநாதன் இவரைப்பற்றிச் சிறிது கூற முடியுமா என்றேன் நான். அப்போது ஓவியர் கூறியதாவது: சாரீர அமைப்பில் சங்கீத பூஷணம் போல், குலசீலநாதன் இருவரும் கிட்டத்தட்ட பாலமுரளி கிருஷ்ணாவைப்போல் இருப்பார்கள். திரு.போல் அவர்கள் சாத்திர முறையில் கர்நாடக இசையைப்பயின்று அவ் வழியில் வாழ்பவர். திரு.குலசீலநாதன் அவர்கள் அப்படி இசையைப் படித்திருந்த போதிலும் மெல்லிசை வழியில் தனது நாட்டத்தைப் போக விட்டிருக்கிறார். கொழும்புக்கு ஒருமுறை சென்றபோது என்னை நானே பாடகருக்கு அறிமுகம் செய்து வைத்துப் படம் எழுதினேன். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இசைத் துறைப் பிரிவில் கடமையாற்றுகின்ற இவர், பொதுமக்கள் யாவரும் கேட்டு இன்புறும் படிக்கான பல இசைத்தட்டுக்களைக் கொடுத்திருக்கிறார் இப்படிப் பட்டவர்கள் முன்னேறி நாட்டுக்கு நல்ல பணிகளைச் செய்தல் வேண்டும் இவர்களுக்கு உதவி செய்து வழிகாட்டுபவர்கள் யார்? என்று முடித்தார் ஓவியர் பெனடிற்.

நம்பிக்கையான நவநாகரிக தங்க,வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், போன்: 7199.

யாழ்ப்பாணம்: தந்தி: வைரம்

வெலிங்டன் ஃ முத்துராமன் ஃ சுஜாதா
(யாழ். நகர்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 விஜயகுமார்—லதா
(யாழ். நகர்) நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

REGAL Daily: 4-45, 7-00 & 9-30 p. m.
(JAFFNA)
3-rd CROWDED WEEK
ALAN PRICE
ALFIE DARLING
(Color-adults only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

இதயம் கனியாகும்
117-வது வெற்றித் தினம்!
மனோகரா எம்.ஜி.ஆர் • ராதாசலுஜா
வீரப்பா • நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

ராணி எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் ஜெமினி—சரோஜாதேவி
(யாழ்ப்பாணம்) நாகேஷ்—விஜயநிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
பணமா பாசமா

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15 & 9.45
RUSSIAN ROULETTE
மர்மக் கதைகளுக்கே முடியாய் விளங்குவது. 007 பாணியில் துப்பாக்கியோடு சுற்றிச் சுழன்று திரிகிறான் ஜோஜ் சேகால்.
மது சுதந்திரம் கோடு-அண்டைநாடுகளை அடிமைப் படுத்தாதே-என்னும் சுதந்திரவாதிகளின் கம்யூனிஸ எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் ருஷ்ய உளவாளிகளுக்கும் நடக்கும் போராட்டம்.
மர்மம் - விறுவிறுப்பு - அதிர்ச்சிமிக்க சம்பவங்கள் நிறைந்தது.
Thrilling - Exciting - Demanding
(சில நாட்களுக்கு மட்டும்)


## இன்பியல்—

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

குமாரசாமி அவர்கள் கூறியது போல், கண்ணீர் அற்ற துன்பத்தினையும், சிரிப்பு அற்ற இன்பத்தினையும், வீறு அற்ற காதல் உணர்வினையும் வெளிப்படுத்தும் ஆற்றல், இசைக்கு மட்டும் இருப்பதுவே.

## சட்டமும்—

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட ஒருவரை ஏற்கும்படி தாம் விளம்பரம் செய்யவில்லைஎன்றவாதம்செய்யலாகாது. ஏனென்றால் முனைவானது தனிப்பட்ட ஒருவரை நோக்கியும் விடுக்கப்படலாம், ஒரு குறிப்பிட்ட கூட்டத்தினரை நோக்கியும் விடுக்கப்படலாம்; பொதுப்பட உலகோரை நோக்கியும் விடுக்கப்படலாம். கொம்பனி விடுத்த முனைவு உலகோரை நோக்கி விடுக்கப்பட்ட ஒன்று. அத்தகைய முனைவை, உலகோரில் எவரும் ஏற்கலாம்.

ஏற்றுக்கொண்டமை பற்றி வழக்காளியான காளையர், எதிராளியான கொம்பனிக்கு அறிவிக்கவில்லை என்ற வாதமும் செல்லாது. பத்திரிகை விளம்பரங்கள் மூலம் செய்யப்படும் முனைவுகள் அந்த முனைவில் சொல்லப்பட்டிருப்பதனைச் செய்வதன்மூலம் ஏற்புச் செய்யப்படுகின்றன என்பது நிலைபேறுகிவிட்ட சட்டக் கோட்பாடு. கொம்பனியார் கர்ப்பூர உருண்டையைப் பாவித்துப்பார்க்கச்சொன்னார்கள். அதுதான் அவர்களது முனைவு. காளையர் அதனைப் பாவிப்பதன்மூலம் ஏற்புச் செய்தார். இந்த ஒப்பந்தத்தின்படி, காளையருக்கு புளுக் காய்ச்சல் வந்தால் கொம்பனி 1000 பவுண் கொடுக்கவேண்டும். மறுப்பது, ஒப்பந்தத்தை மீறுவதாக முடியும். ஒப்பந்த மீறலுக்காக காளையர் தொடுத்த வழக்கில் வெற்றி காளையருக்கே.

என்வே, நீங்களும் கறுப்பன் அந்தசாமிமாரை இனிமேல் கவனித்துக்கொள்ளுங்கள்.


வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர் — தேவிகா
ஆனந்தஜோதி

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
எம். ஜி. ஆர்- சரோஜாதேவி
பணக்காரக் குடும்பம்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெமினி-அஞ்சலிதேவி
வீரக்கனல்


## சிறுகதை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சின்னக்காவின் குணத்திற்காகவா — மாமியின் பிரார்த்தனைக்காகவா ஆண்குழந்தை பிறந்தது.

ஒரு நற்செயலுக்கு எத்தனை பேர்தான் தவமிருக்க வேண்டும்.

அழுதபடி போன மாமி எனும் தெய்வத்தைத் தொழ வேண்டும் போல் இருக்கிறது.

''மாமீ...!''

(யாவும் கற்பனை)

......

## இப்படி —

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு உயர்தர சிந்துப்பசுக்கள் வைத்து பராமரிக்கப்பட்டுவருகின்றன.

மலையைச்சுற்றி 'காங்கிரீட்' பாதை உண்டு. இரண்டு லட்சத்திலிருந்து 40 ஆயிரம் ரூபா செலவில் இது அமைக்கப்பட்டதாம். மலையில் ஏறுவதற்கு படிக்கட்டுகளுடன் யானைப் பாதை என்ற வழியுமுண்டு. இந்த யானைப் பாதையில் பழங்காலத்து நினைவுகளை நமக்கு நினைவுறுத்தும்வகையில் புராணகாலத்துச் சிற்பங்கள் ஆங்காங்கே உருவாக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து மதுரை புறப்பட்டோம். (இன்னும் வரும்)

......

## தமிழ் வளர்த்த ...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளிக்கிறார், வேதநாயக சாஸ்திரியார்.

பக்தியிலே முற்றிய புலவன் ஒருவன் தன் பக்தி மேலீட்டால் கடவுளை நிந்திப்பது போல துதிப்பது வழக்கம். தமிழ் இலக்கியத்தில் இது நிந்தாஸ்துதி என வழங்கப்படுகிறது. இதன் தன்மையே தனிச் சிறப்பு வாய்ந்தது. இவ்வாறான பாடல்கள் பலவற்றைப் பாடினார் சாஸ்திரியார். கிறிஸ்து பெருமான் மேல் அவர் கொண்ட காதலால், நிந்தாஸ் துதியாகப் பாடிய பாடல்கள் பல. அவற்றுள் பின்வருபவை மிகச்சிறந்தவை.

''உத்தனின் செய்தி
யான நீந்நிலனே
உடுப்பதற்கன்றி யொன்றதனை
உவந்து சேவகந்தான்
பீலி போட்டெடுத்தார்
ஒன்று மற்றம்
மனத்திலிருந்தாய்
அந்த நாளுனக்கோர்
மடத்திலு மிடமற்
றயல் வனத்திடை
விடையடையும்
அகத்தினிற் பிறந்தாய்
மிடியினுலுனைப்புல்
வணையின் மேற்
இடத்திரனன்றோ
கந்தையாலுன்னைப்
பொதிந்ததும் அழுது
கதறி நீ பால் குடித்திருந்த
கவடமும் அறிவேன்
தலைமுடி சாய்க்கக்
கழுமரத்திட மிருந்ததுவோ
எந்தையோ உனக்கோர்
நீசவாகனந்தான்
இருந்தனை ஆட்டுதோ ஐயா
எழில்பெறு சீயோன்
மகன் மணவாளா
இறைவனே இயேசுநாயகனே''

உன்னைப்பற்றிநானறியமாட்டேனே? உனக்கு உடுப்பதற்கு அங்கி இல்லாதபடி உன் ஒரே அங்கியைப் போய்ச் சேவகர் தமக்குள் சீட்டுப்போட்டு எடுத்தனர். உனக்கு பிறப்பதற்கு மாடமில்லை, மாளிகைஇல்லை, சொந்த வீடுமில்லை, இரவல் சத்திரத்திலே அதுவும் மாடுகள் அடையும் தொட்டியிலே நீ பிறந்தாயன்றோ; உன்னைப் போர்த்துக்கிடந்தஉன் தாய்க்கு வழியில்லை, கந்தையாலும் புல்லாலும் உன்னை மூடி வைத்ததை நான் அறிவேன். கழுமரம் ஒன்றுதானே உனக்குத் தலைசாய்க்கும் இடமாயுமிருந்தது. என்று ஏளனமாய்ப் பாடும் துதிப்பாடல் எவ்வளவு பக்தியை அள்ளிக் கொட்டுகிறது என்பதை நாம் காண முடியும். (தொடரும்)

## அண்டரும்—

(4-ம் பக்கத் தொடர்ச்சி) :

பஞ்சதருக்களின் நீழலிலிருந்து அனுபவிக்கும் இன்பத்தை விரும்பினேன் அதனால் பெருந்துன்பம் வந்தது, தொண்டனாக மாறிவிட்டால் இறைவன் திருவடிக்கீழ் இன்ப வாழ்க்கையைப் பெறுவேன் என நினைக்கிறான்.

''தண்டேன் துளிக்கும் தரு நிழற் கீழ் வாழ்க்கை வெட்கி கொண்டேன் பெருந்துயரம் வான்பதமும் கோதென்றே கண்டேன் பிறர் தம் பதத் தொலைவும் கண்டனால் தொண்டேன் சிவமே நின் தொல்பதமே வேண்டுவனே'' என்பது சயந்தனின் பிரார்த்தனை.

கந்தபுராண நூலாசிரியர் காஞ்சிபுரத்தில் உள்ள ஆலயங்களில் வழிபாடு செய்யும் கூட்டத்தினரை நோக்கினார். அவர்களை இருபகுதியினராகப் பிரித்தார். கண்டும், கேட்டும், உண்டும், உயிர்த்தும், உற்றும், அறிகின்ற தன்மாத்திரைகளுக்கிருப்பிடமாகிய ஐம்புலன்களையும் இறைவனிடத்திலே பதிக்கின்ற கொள்கையுடைய தொண்டர் கூட்டத்தினர் ஒருவகையினர் தங்களுக்கு இப்போதுள்ள இன்பமே நிலைபெற வேண்டும். அதற்கு இடையூறு ஏற்படக்கூடாது என்பதற்காக கண்ணீர் சொரியும்படி வணங்கும் புலன்வழிச்செல்லும் இயல்புடைய தேவர்கூட்டம்,

கண்டு கேட்டவையுண்டுயிர்த் துற்றறி கருடு
கொண்ட வைம்புலன் ஒருங்குற நடாத்திய கொள்கைத்
தொண்டர் கூட்டமும் விழிவழிப் புனலுக தெழுங்கை
அண்டர் கூட்டமும் ஆலயந் தொழுதொறும் அருளால்.

......

## கணபதி—

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மாலை, யோகதண்டம், கரும்பு இவற்றை ஏந்தி இருப்பவர்.

(31) துர்க்கா கணபதி: சுட்ட பசும்பொன் னிறம், எட்டுக்கை, பெரியமேனி, அங்குசம், பாணம், அட்சமாலை, தந்தம் இவைகளை வலது கைகளில் ஏந்தியவர். பாசம்,வில், கொடி, நாவற்பழம் இவைகளை இடது கைகளில் உடையவர். செந்நிற ஆடையர்.

(32) சங்கடஹர கணபதி: இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு இடப்பாகத் தொடையில் அம்மையை உடையவர். அம்மை பசிய மேனியளாக நீலப் பூவை ஏந்தியவளாக இருப்பாள். வலது கையில் அங்குசம், வரதம் உடையவர். இடது கையில் பாசம், பாயச பாத்திரம் ஏந்தியவர், செந்தாமரைப் பீடத்தில் நிற்பவர். நீல நிறமான ஆடையணிந்தவர்.

......

## பரீட்சையில்—

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்ந்திடுதலே!

### 2. சோதனைப்பயம்

சிலர் எவ்வளவு திறமைசாலிகளாகயிருந்தாலும் சோதனை மண்டபத்தில், 'சோதனைப்பயம்' ஏற்பட்டுக் கற்றவற்றை ஞாபகத்திற்குக் கொண்டுவரமுடியாமலோ, அப்படிக்கொண்டுவந்தவற்றைச் செம்மையாக எழுத முடியாமலோ திண்டாடுவார்கள். சிலருக்கு மூளைவேலை செய்யும்போது பேனை இடம் கொடுக்காது. சிலருக்கோ பேனை இடம்கொடுக்கும்போது மூளை இடம்கொடுக்காது. சோதனைப் பயத்தினால் பீடிக்கப்பட்டு, அதனால் நன்குதெரிந்த விடைகளைக் கூட எழுதமுடியாமல் தவித்து அதனால் சோதனையில் கோட்டைவிடுவோரும் பலருளர். சோதனைப் பயம் என்பதைத் தவிர்ப்பதற்கு ஒரேயொரு வழியுண்டு. ''சோதனை நிலைமை'' என்ற கட்டுப்பாட்டினை வீட்டில் ஏற்படுத்தித் தொடர்ந்து மூன்று மணித்தியாலங்கள் வினாக்களுக்கு விடையெழுதிப் பயின்றிடல் வேண்டும். அப்படிச் சோதனை

(10-ம் பக்கம் பார்க்க)


தினசரி 4 காட்சிகள்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன், உஷா நந்தினி, சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்) விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும்தெய்வமாகலாம்
(ஈட்ஸ்மன் கலர்)

"திருவருள்" புரியும் பக்திரசமான 4-வது வாரம்
தினசரி 4 காட்சிகள் ஏ.வி.எம்.ராஜன், கிருபானந்தவாரியார்
ராஜா (யாழ்நகர்) போன்: 7180 நாகேஷ், சுந்தரராஜன், நடித்த
தேவரின்
திருவருள்
(ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு: பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்குசெய்துகொள்ளலாம்.

# உடுப்பிட்டியில் வெற்றி

## இன்றேல் கூட்டணிக்கு வெற்றி அல்ல

## முற்றவெளியில் உடுப்பிட்டி 'சிவா'

யாழ்ப்பாணம், ஞாயிறு உடுப்பிட்டித் தொகுதியில் சிறுபான்மைத் தமிழர் ஒருவரை கூட்டணி அபேட்சகராக நிறுத்தியுள்ளோம். நாம் எல்லாத் தொகுதியிலும் வெற்றிபெற்று உடுப்பிட்டியில் வெற்றிபெறாவிட்டால் அது கூட்டணியின் வெற்றியல்ல. உடுப்பிட்டியிலிருந்து நாம் சிறுபான்மைத் தமிழரை தேசிய அரசுப்பேரவைக்கு அனுப்பாவிட்டால், தமிழ் மக்கள், கூட்டணி கொள்கையை ஏற்கவில்லை, என்றுதான் கருதமுடியும்.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடந்த தமிழர் கூட்டணி அபேட்சகர்கள் அறிமுக கூட்டத்தில் பேசிய கூட்டணி செயல் அதிபரும், நல்லூர்த்தொகுதி கூட்டணிவேட்பாளருமான திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டணி உபதலைவர் திரு. எஸ். தம்பித்துரை தலைமையில் நடந்த இக் கூட்டத்தில், கூட்டணி அபேட்சகர்கள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர்.

திரு. எம். சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது; உடுப்பிட்டி தொகுதிமக்கள் 10 ஆண்டுகளாக என்மீது காட்டிவரும் அன்பினால் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். திரு. இராசலிங்கத்தின் வெற்றிக்காக உழையுங்கள். மற்றும் தொகுதிகளிலிருந்தும், ஆண்கள், பெண்கள், சென்று வீடு வீடாக பிரசாரம் செய்து அவரை வெற்றிபெறச்செய்ய வேண்டும்.

தமிழர் கூட்டணியின் ஒற்றுமையை குலைக்க பல முனைகளில், எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இரு. சுந்தரலிங்கம், ஒரு முனையிலும், சுயாட்சிக் கழகம் மறுமுனையிலும் எதிர்த்து வருகின்றனர்.

எனக்கு வேதனை தருவது என்னவென்றால், நம் தலைவர் ஜி. ஜி.யின் புதல்வர் குமார் பொன்னம்பலம் இந்த ஒற்றுமையை குலைக்க முயற்சிப்பதுதான்:

இந்தநாட்டில் தமிழர் ஒற்றுமைப்பட்டுவிட்டார்கள் என்பதை சிங்கள மக்களுக்குக் காட்ட 'ட்ரயல் அட்பார்' வழக்கில் ஜி. ஜி. ஆஜரானார். அவர் இந்த நாட்டில் தமிழர் ஒற்றுமைக்காகப் பாடுபட்டு, இடையில் பிரிந்திருந்தாலும், இறுதியில் ஒற்றுமையை ஏற்படுத்தினார். அவரின் மகன் தம்பி குமார் இந்த ஒற்றுமையைக் குலைக்க முயற்சிப்பதையிட்டு வேதனைப்படுகிறேன்.

### குமாருக்கு வேண்டுகோள்

கூட்டணியின் ஒற்றுமையை குலைக்கவேண்டாமென தம்பி குமாரை மிக அன்போடும் பணிவோடும் கேட்டுக்கொள்கிறேன். இந்தமுறை அவர் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கியிருந்து கூட்டணி வேட்பாளர்களின் வெற்றிக்காக முக்கியமாக யாழ்ப்பாணத்தில் யோகேஸ்வரன் வெற்றிக்காக உழைத்தால் கூட்டணியினரும், தமிழினமும் அவருக்கு என்றென்றும் நன்றியாக இருப்பார்கள்.

மேடையில் அமரர்களான தந்தை செல்வா, ஜி. ஜி. பொன்னம்பலம் ஆகியோரின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

கூட்ட ஆரம்பத்தில் தலைவர்கள் இருவருக்கும் இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கூட்டணி அபேட்சர்கள் உரையாற்றினார்கள். பெண்கள் உட்படப் பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர். (க)

## கலையுலகத் தொடர்பு—

(4-பக்கத் தொடர்ச்சி))

போய்ப்பார்ப்போம் என்றார். ஏற்கனவே இவர்கள் மேடையில் தோன்றமாட்டார்கள் என்று அறிந்திருந்த ரசிகர்கள் கலை நிகழ்ச்சிக்கு டிக்கட் வாங்கியிருந்தும் வரவில்லை. ஆகையால் கலைநிகழ்ச்சிக்கு வந்தவர்கள் சிலரே. கலைநிகழ்ச்சி நடைபெறும் மண்டபத்தை அடைத்ததும் உள்ளே போய் பார்ப்போம் மேடையிலேதானே ஏறக்கூடாது. கூட்டத்தோடு கூட்டமா இருக்கலாம்தானே என்று சொல்லிக்கொண்டு உள்ளே போய் காலியாக இருந்த ஒரு ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டார். அவரை பின் தொடர்ந்த மனோரமாவும் ஒரு ஆசனத்தில் அமர்ந்து கொண்டார் ஒரு பத்து நிமிட நேரம் அமர்ந்து நிகழ்ச்சிகளை பார்த்தார்கள். அங்கு நிகழ்ச்சியை கண்டுகளித்துக் கொண்டிருந்தவர்களுக்கும் சோ மனோரமாவை நேரில் பார்த்த திருப்தி. மேடையில் ஏறி விட்டாலும் ஏதோ கலைநிகழ்ச்சியிலே நாங்க கலந்து கொண்டது அழைச்சவங்களுக்கு ஒரு ஆறுதலாக இருக்கும் என்றார் சோ.

அடுத்தநாள் காலை என் வீட்டில் சோ மனோரமாவுக்கு காலைப்போஜனம். என் புதிய வீட்டிற்கு வந்த முதல் சினிமா கலைஞர்கள் சோ, மனோரமாதான். அதன்பின் சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்திற்கு சென்று திரு. குணரத்தினத்தை சந்தித்து பேசிவிட்டு அவருடைய விஜயா ஸ்ருடியோவிற்கு போனோம். அங்கு சில சிங்களப் படங்களிலிருந்து சில பகுதிகளை பார்த்து ரசித்தார்கள்.

அப்பொழுது மனோரமாதான் நடித்தது முதல் படம் ஒரு சிங்களப்படம்தான் என்பதை ஞாபகமூட்டிக் கொண்டாச். விஜயா ஸ்ருடியோவிலிருந்து புறப்படும் பொழுது வழமைபோல் சோ எனதுகாரை ஓட்ட ஆரம்பித்தார் புதிய களனிபாலத்தை அனுகியிருப்போம் எனது காரின் சைலன்ஸர் கழன்று விழுந்துவிட்டது. காருக்கு அடியில் அது தொங்கி ரோட்டில் இழுபடும் சப்தம். உடனே சோ காரை நிறுத்தினார். இறங்கி கீழே குனிந்து பார்த்தார் மறுபேச்சில்லாமல் காருக்கு அடியில் போய் சைலன்ஸரை எடுத்து அதன் பிருக்கட்டில் வைத்து இறுக்கிவிட்டு வெளிவந்து ஏறுங்க போவோம் என்றார். காருக்கு அடியில்போய் பழுதுபார்த்ததால் அவர் முதுகுச்சட்டை எல்லாம் அழுக்காகிவிட்டது. ஆனால் அதைபெரிது படுத்திக்கொள்ளாமல் நேரே ஹோட்டலுக்குத்தானே போகிறோம். அங்கு போய் உடுப்பை மாற்றிக்கொண்டால் போச்சு என்று கூறிக் கொண்டே காரை ஓட்ட ஆரம்பித்தார்.

அடுத்த நாள் நான் ஒழுங்குசெய்திருந்த பேட்டி. இது ஒரு நகைக்கடைக்காக ஒழுங்கு செய்திருந்த விளம்பரத்திற்கான நிகழ்ச்சி. அவர்கள் தங்கள் வாடிக்கைகாரர்களையும் நிலையத்திற்கு வரவழைத்திருந்தார்கள். நிலையத்தில் பெரிய ஸ்ருடியோவான ஆறும் நம்பர் ஸ்ருடியோவில் தான் இந்நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. வந்திருந்த ரசிகர்களும் கேள்வி கேட்கலாம் என்று சொன்னதுதான் தாமதம் நான் நீ என்று போட்டிபோட்டுக் கொண்டு பலர் கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்.

ஒருவர் மனோரமாவை பாட்டுப்பாடும்படி கேட்டார். மனோரமா விடுவாரா இச்சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி எவ்வித பக்கவாத்தியமுமில்லாமல் தனக்குத் தெரிந்த ஒரு பாடலை பாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார். சோ தனக்கே உரித்தான பாணியில் கேள்விகளுக்குப் பதிலளித்து பாராட்டைப்பெற்றார். என் அறிவிப்பாளர் பதவிக்காலத்தில் ரசிகர்கள் கலந்து நடத்திய முதல் கேள்வி பதில் நிகழ்ச்சி இதுவேயாகும். இப்படியான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்த என்னை மனோரமாவும் சோவும் வாழ்த்தினார்கள். இந்நிகழ்ச்சியை ஆசிய சேவையில் ஒலிபரப்பியபின் மனோரமாவுக்கு நூற்றுக் கணக்கான கடிதங்கள் கிடைத்தனவாம். அதற்காக நன்றி செலுத்தியும் எனக்கு ஒரு கடிதம் போட்டிருந்தார் மனோரமா. சோ அரசியலில் ஈடுபட்டபின் படங்கள் கூடியும் குறைந்தும் வந்தன ஆனால் அவர் நாடகங்களுக்கு நல்ல கிராக்கி இருந்துவருகிறது. மனோரமா அன்றுபோல் இன்றும். ஆனால் இப்பொழுது பாடி நடித்துவருகிறார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O; Box 49, Jaffna; Telegram: Eelanaadu Telephone 389, Registered as a Newspaper in Sri Lanka.

## சுதந்திர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசை- சுவிற்சலாந்து தேசத்திலே உள்ளதுபோல இணைப்பாட்சிமுறை கொண்ட, தமிழ் ஈழத்தை உருவாக்க முனைந்துள்ளது. அதற்காக இத் தேர்தலை மக்களின் அங்கீகாரத்துக்கு பயன்படுத்துவோம்.

ஒரு சுதந்திர இறைமையுள்ள மதச்சார்பற்ற சமதர்ம ஈழ அரசை நிறுவ தமிழ் தேசிய இனத்தின் கட்டளையை தமிழர் விடுதலைக்கூட்டணிநாடியுள்ளது. (கெ-இ)

## பரீட்சையில்--

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமையில் விடையெழுதிப் பழகும்போது, நீங்கள் உண்மையாகவே சோதனை மண்டபத்தில் வீற்றிருப்பது போலவும், சோதனை மண்டபத்திலுள்ள கட்டுப்பாடு அத்தனையையும் வீட்டிலும் ஏற்படுத்தி அக் கட்டுப்பாடு எல்லைகளைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அப்படிச் சோதனை நிலைமையிலிருந்து விடைபகர்ந்து பயிலும்போது, உண்மையான சோதனை மண்டபத்தில் வீற்றிருப்பது போன்றுகற்பனை செய்து, வீட்டில் விடை எழுதுவது போலவே, சோதனை மண்டபத்திலும் துணிவுடனும், மனநம்பிக்கையுடனும், விடை எழுதிடுவேன் என்று உறுதி பூண்டிடல் வேண்டும். இவ்வாறு ஐந்தாறுமுறை ''சோதனை நிலைமை'' பயிற்சிகள் பெற்றிடின் ''சோதனைப் பயம்'' உங்களிடமிருந்து விடைபெற்று விடும்.

(தொடரும்

பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்காக

## யாழ். வளாக மாணவர் ஆடை சேகரிப்பர்

யாழ்ப்பாணம், ஞாயிறு புசல்லாவை சங்குவாரித் தோட்டத்திலும் டெல்டா வடக்குத் தோட்டத்திலும் அண்மையில் நடைபெற்ற வன்முறை கொள்ளைச் சம்பவங்களை அடுத்து உடுக்கத் துணி எதுவும் இன்றி அவதியுறும் மக்களுக்கு உடுதுணிகளை வழங்கும் நோக்குடன் இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாக தமிழ் மன்ற மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் ஆடை சேகரிக்கும் இயக்கம் ஒன்றை நடாத்த உள்ளனர்.

இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்தில் வளாக மாணவர்கள் ஆடை சேகரிப்பார்கள்.

## தமிழ...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இனம், சுயநிர்ணய உரிமை உடைய பிரதேச சுயாட்சி என்ற மூன்று அம்சங்களைப் பற்றியும் கட்சி பொதுத்தேர்தலின் பின்புதான் தீர்க்கமான முடிவு எடுக்கும் என்பதாயின் இம்முறை இடம்பெறும் பொதுத்தேர்தலில் தமிழ்ப்பிரதேசங்களில் போட்டியிடாமல் விடுவதென்பது விரும்பத்தக்கது. இக் கடிதத்தின் பிரதி மாவட்ட குழுவுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (ஈ)

(1-ம்பக்கத்தொடர்ச்சி)


துள்ள போதிலும் காங்கேசன் துறையிலிருந்து மாகோவரை பகலில் மட்டும் இரண்டு ரயில் சேவைகள் நடத்தப்படுகிறது.

காலை 6.05 மணிக்கும் காலை 6.55க்கும் இந்த ரயில்கள் காங்கேசன் துறையிலிருந்து மாகோவுக்குச் செல்கின்றன. (இ)

தெய்வ அனுக்கிரகம் — பூரண சுகம்

வள்ளிமலை மூலிகைச்

சித்தரை சந்தித்துவிட்டீர்களா?



உங்களைப் பீடித்துள்ள நாட்பட்ட ஆஸ்த்மா வியாதி, நீரழிவு, மூல வியாதி, குடல்புண், வாத பீடை, பித்த மயக்கம் முதலான சகல பிணிகளும் நீக்கித்தருவார்.

இது மட்டுமல்ல, 40 வயதுக்கு மேலாகிவிட்டபடியால் இல்லற உறவில் சந்தோஷமடையவில்லையா? விசேட லேகிய ஔடதம் உண்டு.

வீட்டுத் தோஷங்கள், குடும்ப பிணக்குகள் நீக்கித் தரப்படும். செய்தொழில் விருத்திக்கும், தடைப்பட்ட திருமணங்கள் நிறைவேறவும்உதவுவோம் யுவதிகளே! தலைமுடி வளரவும், முக வசீகரத்துக்கும் உகந்த ஔடதங்கள் உண்டு.

ஸ்ரீபாலசுப்பிரமணியசுவாமி

745, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மாவத்தை

கிருண்ட்பாஸ் P.O — கொழும்பு-14

## மரண அறிவித்தல்

### வே. வே. கந்தையா (மாஸ்டர்)

சாவகச்சேரி றிபேர்க் கல்லூரியில் கடமையாற்றி இளைப்பாறிய தலைமை ஆசிரியரும், காலஞ்சென்ற மார்க்கிரட் சின்னம்மாவின் அன்புக்கணவரும், தேவசகாயம், தேவமணி, தேவமலர், தேவகிருபை, தேவதாசன், தேவநேசன், தேவதயாளம் ஆகியோரின் தந்தையும், ஜி. பி. போல், டி. ரி உவாட்ஸ்வோர்த், வி. எஸ். ஏ. இராஜரத்தினம், அரியராணி, சயாமி ஆகியோரின் மாமனும், சின்னப்பு, காலஞ்சென்ற தம்பிமுத்து ஆகியோரின் சகோதரருமான வே. வே. கந்தையா நித்தியத்திற்குள் பிரவேசித்துவிட்டார். அன்னாரின் பூதவுடல் இன்று (ஞாயிறு) மாலை ஐந்து மணிக்கு சாவகச்சேரி கென்ஸ்மன் லேன், 'ஜோய்கொற்' இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும் 6307

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி இராசரத்தினம்

அளவெட்டி வடக்கு சீனன்கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் வத்தகம எஸ்டேட் இராசரத்தினம், திருமதி புவனேஸ்வரி செல்லத்துரை, திருமதி அன்னலட்சுமி சிவதாசன், மட்டக்களப்பு வருமானவரிக்கிளை சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும் அளவெட்டி ஞானோதய வித்தியாசாலை ஆசிரியையுமாகிய திருமதி மகேஸ்வரி இராசரத்தினம் காலமானார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை அளவெட்டியில் நடை பெறும். 6316